# மன்னா

"தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் நீர் நிலைகளுக்கு வாருங்கள்" (எசாயா 49:13)

விலை ரூபா 12.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 15 | சித்திரை, 2002 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 82

மன்னார் மறை மாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# சமாதான முன்முயற்சிகளில் ஆயர்களின் பங்களிப்பு குறித்து பிரதமர் பெரிமிதம்!



"எமக்கிடையே இருந்த இடைவெளியைக் குறைத்து தொடர்பாளர்களாக செயற்பட்டவர்கள் ஆயர்கள். சமாதன முயற்சிகளில் நிச்சயமாக கத்தோலிக்க ஆயர்களுக்கு பெரும் பங்கு உண்டு"

## யாழ். ஆயர் இல்லத்தில் பிரதமர் புகழாரம்!

சமாதான முயற்சிகளில் நிச்சயமாக கத்தோலிக்க ஆயர்களுக்கு பெரும் பங்கு உண்டு என யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது கூறினார். அவர் மேலும் பேசுகையில் யாழ்ப்பாணம், மன்னார், திருமலை மட்டுநகர் ஆயர்கள் எமது நாட்டில் இருக்கும் எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எமக்கிடையே இருந்த இடைவெளியைக் குறைத்து தொடர்பாளர்களாக செயற்பட்டவர்கள் ஆயர்கள். சமாதானம் இன்னும் வந்துவிடவில்லை. சமாதானத்திற்கான ஆரம்பமே இந்த முயற்சியாகும். யாழ் ஆயரிடமும் மற்ற ஆயர்களிடமும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைக்கான மற்றும் அனைத்து செயற்பாடுகளுக்குமான உதவிகளை வேண்டி நிற்கின்றேன் என பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

## வவுனியாவில் அமதிகளின நற்செய்தி அறிவிப்பு மையம்

ஏப்ரல் மாதம் 6ம் திகதி வவுனியா குட்செட் வீதியில் உள்ள அமதியகம என்ற அ.ம.தி களின் இல்லத்தில் 'நற்செய்தி அறிவிப்பு மையம்' ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த மையத்தை மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆசிர்வதித்து திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமதிகளின் மாகாண முதல்வர் உட்பட பெருந்தொகையான குருக்கள் துறவிகள் இறைமக்கள் கலந்து கொண்டனர்.


## உலக அமைதி செப வழிபாடு

அசீசியில் கடந்த 24.01.2002 அன்று திருத்தந்தையுடன் இடம்பெற்ற உலக அமைதி செபவழிபாட்டில் 224 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் 59 பேர் திருப்பீடத்தைச் சார்ந்தவர்கள். இந்து, யூதம், இஸ்லாம், புத்தம், சிந்தோனிசம், சைனம், சீக்கியம், சூரசியம், ஆபிரிக்க பாரம்பரிய மதங்களென 11 கிறிஸ்தவமல்லா மதங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். கிறிஸ்தவமல்லாத மதங்களிலிருந்து பங்கேற்ற பிரதிநிதிகளுள் 1/3 பகுதியினர் இஸ்லாமியர்.

## இயேசுவுடன் கொள்ளும் உறவே கத்தோலிக்கம்!

### திருத்தந்தைக்கு வழங்கிய தியானத்தில் பெரு மறைமாவட்டப் பேராயர்

கத்தோலிக்கம் என்பது கோட்பாடு அல்ல. அது இயேசுவோடு கொள்ளுகின்ற உறவு என்று கூறினார் கருதினால் கிளட்டியோ போமஸ். திருத்தந்தையும் அவருடன் உடன் உழைப்பாளிகளும் ஒரு வாரத் தியானத்தை 18- 02- 2002ல் துவங்கினர். தியானத்திற்கு வழிகாட்டியாக திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் பெரு மறைமாவட்டப் பேராயர் கருதினால் கிளாடியோ போமஸ்சை நியமித்திருந்தார். முதல் நாள் உரையில் கருதினால் இயேசுவின் அறிவையும் கோட்பாடுகளையும் புகுத்துவது நல்லதுதான். ஆனால் அவைகள் யாவும் அறிவு சார்ந்தவையாக சட்டங்களாக கோட்பாடுகளாக மட்டுமல்லாமல் இன்று நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்தையும் மனதில் கொண்டு இயேசுவோடு நாம் கொள்ளுகின்ற உறவில் இருக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் இன்று எல்லாரும் தங்கள் பூட்டப்பட்ட கதவுகளைத் திறப்பதில்லை. காரணம் ஒருவேளை இயேசு உள்நுழைந்து தங்களின் சுயநலப் போக்குகளை அழித்து விடுவாரோ என்று அஞ்சுகிறார்கள் என்று கூறிய கருதினால், ஆயர்களாகிய நாம் ஏழைகளோடு தோள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



சண்டை மூலம் சமாதானம் தேட முயன்ற சரித்திரம் இனி மறையட்டும்! யுத்த டாங்கிகள் பேசிய காலம் போய் இனி மனித மனங்கள் பேசட்டும்! மனிதாபிமானமும் விட்டுக்கொடுப்பும் பேசட்டும்!

## யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் புலிகள் தரப்பு மன்னார் பிரதிநிதியாக குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளார்



அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கண்காணிப்புக் குழுவின் புலிகள் தரப்பு மன்னார் பிரதிநிதியாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அதி வண. சேவியர் குருஸ் அடிகளார் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டுள்ளார். வடகிழக்கு பகுதியின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அரசும் புலிகளும் தத்தமது சார்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளை நியமித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கார்மேல் கன்னியர் அருட்சகோதரி கேட்ருட் மேரியின் துறவற வெள்ளிவிழா

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட - தற்போது முருங்கனில் பணியாற்றும் அருட்சகோதரி கேட்ருட் மேரி அவர்களின் துறவற வெள்ளி விழா சித்திரை மாதம் 13ம் திகதி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம் பெற்றது. வெள்ளி விழா திருப்பலியை யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் அன்ரனி தாசன் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். மறையுரையும் ஆற்றினார். திருப்பலி முடிவில் பாராட்டு விழாவும் பின்னர் கன்னியர் இல்லத்தில் மதிய விருந்தும் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பல குருக்கள் துறவியர் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர். துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழாக்காணும் அருட் சகோதரியை மன்னா பத்திரிகை சார்பாக வாழ்த்துகின்றோம்.

## நம்பிக்கையீனங்கள் அகற்றப்பட வேண்டும்! பகைமை உணர்வுகள் கழுவப்பட வேண்டும்!

### திருமலை மட்டுநகர் ஆயர்



..ந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நமது நாட்டில் ..ல கோர நிகழ்வுகளையும், பாரிய அழிவுகளையும், ..படுத்தி வந்த இனப்பிரச்சினையில் நல்லதொரு திருப்பம் ஏற்படும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இருண்ட வானின் ஓரத்தே எழும் இளம் பரிதிபோல, யுத்த மேகம் கவிழ்ந்திருந்த இந்நாட்டில் நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளமை இந்நாட்டு ..க்கள் அனைவருக்கும், அதிலும் சிறப்பாக யுத்தத்தாலும் இன்னும் பல்வேறு கெடுபிடிகளாலும் தடைகளாலும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு மிகுந்த ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

"தளர்ந்துபோன கைகளை திடப்படுத்துங்கள் தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்" (எசாயா 35: 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு

# பதிப்பாசிரியர் பகர்வது

**வணக்கம்**

## ஆவியை அணைத்து விடாதீர்கள்!

மனிதர்களில் பல வகையான மனிதர்கள் இருக்கின்றார்கள். அரசியல் மனிதன் - பொருளாதார மனிதன் - கலை மனிதன் அறிவியல் மனிதன் - பணக்கார மனிதன் என்று இந்தப்பட்டியல் தொடர்கின்றது. இதில் ஆன்மீக மனிதனும் அடங்குகிறான். மனித வாழ்வு என்பது உழைத்துப் பறித்து, உண்டு குடித்து, உறங்கி எழுந்து வாழுகின்ற வெறும் வாழ்வு மட்டும் அல்ல. மனித வாழ்வு அழிந்து ஒழிந்து போகின்ற ஒரு சடப்பொருள் வாழ்வு மட்டும் அல்ல. மனித வாழ்வு என்பது ஆண்டவராலே அவருடைய ஆவியினாலே ஆட்கொள்ளப்பட்டு வாழப்படுகின்ற ஒரு உன்னத வாழ்வு. அளவிட முடியாத ஆவியின் ஆற்றலைக் கொண்டு வாழவேண்டிய ஒரு ஆன்மீக வாழ்வு - இது வெறும் உயிர் வாழ்வு அல்ல. மாறாக இது ஒரு உயர் வாழ்வு.

### பெந்தகோஸ்தே அனுபவம்

பெந்தகோஸ்தே நாள் அன்று அந்த மேல்மாடி அறையிலே இருந்த அந்த சாதாரண அப்பாவி மனிதர்களுக்கு நேர்ந்த கதி என்ன? அவர்களுக்கு என்ன நடந்தது? இயேசுவினுடைய மரணத்திற்குப் பின்னர் செய்வதறியாது திகைத்து நின்ற அந்தச் சீடர்கள் தமது விதி - தமது கதி என்ன என்று அறியாமல் கலங்கி நின்ற சீடர்களில் ஏற்பட்ட மாற்றம் என்ன? கோழைத்தனத்தின் கோபுரத்தில் நின்ற சீடர்கள் ஆவியைப் பெற்று அச்சம் நீங்கி புதிய சமுதாயம் படைக்க வீறு கொண்டு புறப்பட்டார்கள். பூட்டிய கதவுகள் திறந்தன. அச்சம் அகன்றது. வீரம் பிறந்தது. ஆம்! அப்போஸ்தலர்கள் ஆவியின் ஆற்றலால் ஆட்கொள்ளப்பட்டார்கள். இதுதான் பெந்தக்கோஸ்தே அனுபவம.

மனித இயல்புக்கு அப்பாற்பட்ட ஒரு இறையனுபவத்தை இயற்கையைக் கடந்த ஒரு இறைவெளிப்பாட்டை அன்று அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்டனர். பெந்தகோஸ்தே நிகழ்ச்சி மீட்பின் வரலாற்றில் ஒரு மாபெரும் சம்பவம். இறைவனுடைய இரட்சணிய சரித்திரத்தில் இது ஓர் திருப்புமுனை - அன்று பரிசுத்த ஆவியின் வருகையால் இப்பூமியில் ஒரு புது யுகம் புலர்ந்தது.

அப்போஸ்தலர்கள் பெற்ற அதே ஆற்றல் வாய்ந்த, சக்தி வாய்ந்த ஆவியைத்தான் நாமும் நம் திருமுழுக்கின் பொழுது பெற்றுக்கொண்டோம். உறுதிப்பூசுதலின் போது அதே ஆவியின் கொடைகளையும், கனிகளையும் பெற்றுக்கொண்டோம். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவருடைய வாழ்வு உயிரூட்டம் நிறைந்த வாழ்வாக - உற்சாகம் நிறைந்த வாழ்வாக இருக்க வேண்டும். உண்மையை - நன்மையை நாடுகின்ற வாழ்வாக இருக்க வேண்டும். ஆனால் இன்று நம்முடைய நிலமை என்ன?

ஆர்வமில்லாத, அக்கறையில்லாத, துடிப்பில்லாத மேலோட்டமான ஓர் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தூய ஆவிக்குரிய வாழ்வை அல்ல, தீய ஆவிக்குரிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒரே சர்வேசுரனை விசுவசிப்பதற்கு பதிலாக ஒன்பது சர்வேசுரன்களை நடைமுறை வாழ்வில் விசுவசிக்கின்றோம். தூய ஆவியின் அணைகடந்த - அற்புதமான ஆற்றலை அறியாதவர்களாக - கேவலம் - தீய ஆவிக்கு அடிமைப்பட்டு வாழுகின்றோம். இறைவனால் கூடாதது சாத்தானால் கூடும் என்று நினைக்கின்றோம்.

தூய ஆவியின் விழாவுக்கு நம்மை ஆயத்தம் செய்யும் இக்காலத்தில் நாம் இன்னும் அதிகமதிகமாக ஆவியானவரின் ஆற்றலுக்காக செபிப்போம்.

### தூய ஆவியார் இல்லாவிட்டால்..

நம்மில் பொழியப்பட்ட ஆவியின் அக்கினியை அணைத்துவிடாதபடி கவனமாக இருப்போம். ஒரு புதிய ஒளியில் நம்மையும் நமது சிந்தனை செயல்பாடுகளையும் சுய மதிப்பீடு செய்ய அழைக்கப்படுகின்றோம்.

"தூய ஆவியார் இல்லாவிட்டால்.......
இறையனுபவமே இருக்காது. இயேசு ஒரு சரித்திர நாயகன் மட்டுமே. நற்செய்தி உயிரற்ற, பொருளற்ற நூலே. திருச்சபை ஒரு மாபெரும் நிறுவனமே. அதிகாரம் என்பது ஒரு ஆதிக்கம். நற்செய்தி அறிவிப்புப்பணி ஒரு விளம்பரப் பொருளே. திருவழிபாடு ஒரு நாடகமே. கிறிஸ்தவ வாழ்வு ஓர் அடிமைத்தனமே.

ஆனால் ஆவியார் ஆட்கொண்டால......
படைப்பெல்லாம் மீட்புப்பெறுகின்றது. இறையரசு ஓங்கி வளர்கிறது. உயிர்த்த ஆண்டவர் வாழ வைக்கின்றார். நற்செய்தி மீட்பளிக்கும் வல்லமையாகிறது. திருச்சபை தூய திருத்துவத்தை எதிரொலிக்கின்றது. அதிகாரம் அன்புச் சேவையாக மாறுகிறது. நற்செய்தி அறிவிப்புப்பணி ஒரு பெந்தகோஸ்து அனுபவமாகிறது. திருவழிபாடு உயிரூட்டம் பெறுகிறது. கிறிஸ்தவ வாழ்வு புத்துயிர் பெறுகிறது."

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை**
**இறையாசீர்.**
**அன்புடன்,**
அருட்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்

# மறைமாவட்ட செய்திகள்

## குருக்களு[illegible]ான கருத்தரங்கு

கடந்த ஏப்பரல் மாதம் 8, 9ம் திகதிகளில் ஆசியத் திருச்சபை என்ற தலைப்பில் மன்[illegible] மறைமாவட்ட குருக்களுக்கான கருத்தமர்வு மன்னாரில் [illegible]யர் இல்லத்தில் இடம் பெற்றது. இக்கருத்தரங்கை கொ[illegible]பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ஜோசெ[illegible]ன்டோ அவர்கள் நெறிப்படுத்தினார்.

## சின்னம் வழங்[illegible]ம் ஆன்மீகப் பாசறை

ஏப்பரல் மாதம் 7ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் மேற்படி பாசறை இடம்பெற்றது. மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இருந்து ஏறக்குறைய 30 திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்கள் இப்பாசறையில் பங்கேற்ற[illegible]ர். இந்நிகழ்வை நெறிப்படுத்த திருப்பாலத்துவ சபை தேசிய இயக்குனர் அருட்பணியாளர் ரொனி மார்ட்டின் அவர்கள் வருகை தந்திருந்தார். திருப்பாலத்துவ சபை மறைமாவட்ட இயக்குனர் அருட்பணியாளர் நோபட் அடிகளாரும் உதவி இயக்குனர் அருட்பணியாளர் பாக்கிய ர[illegible]சித் அடிகளாரும் இந்நிகழ்வை நெறிப்படுத்தினர். இறுதிநாள் திருப்பலியை மறைமாவட்டக் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் நிறைவேற்றி வைத்து ஊக்குவிப்பாளர்களுக்கான சின்னங்களை வழங்கினார்.

## மன்னாரில் பத்திரிசியார் தினம்

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் மன்னார் பழைய மாணவர்கள் புனித பத்திரிசியார் தினத்தை மன்னாரில் கொண்டாடினார்கள். மன்னார் பேராலையத்தில் இடம்பெற்ற இவ்விழாவில் மன்னார் ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மாலையில் மன்னார் சிறிய குருமடத்தில் கரப்பந்தாட்டப் போட்டியும் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு 55 பழைய மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். இந்த அமைப்பின் புதிய தலைவராக அருட்பணியாளர் ஜெ.பி. தேவராஜா அடிகளார் தெரிவு செய்யப்பட்டார்.

## மன்னார் மறைமாவட்டத்தில்
### இலவச அப்பியாசப்புத்தக விநியோகம்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா, மன்னார் (மடுப்பிரதேசம் உட்பட) மாவட்டப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி நோக்கி இன, மத பேதமற்று வசதி குறைந்த 3127 மாணவர்களுக்கு 16195 அப்பியாசப்புத்தகங்கள் வாழ்வுதய நிறுவனத்தினால் பங்குக்குருக்கள் ஊடாக இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. வாழ்வுதயத்தின் தலைமைச்செயலகமான, "செடேக்" கறிற்றாஸ் சிறிலங்கா நிறுவனம் இவற்றை தந்துதவியமை குறிப்பிடத்தக்கது.

# வந்து பாருங்கள்

## அழைத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சி – ஓர் அனுபவப் பகிர்வு

1.10.2002 எமக்கு மகிழ்ச்சியானதொரு நன்னாள். அன்றைய தினம் திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மடு, மன்னார்ப் பிரதேசத்தின் பல்வேறு இடங்களைச் சார்ந்த இளம் பெண்கள் இருபது பேர் திருக்குடும்ப சகோதரிகளால் நடாத்தப்பட்ட அழைத்தல் ஊக்குவிப்பு நிகழ்வான வந்து பாருங்கள நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கெடுப்பதற்காகவும், துறவு வாழ்வை – விசேடமாகத் திருக்குடும்பத் துறவு வாழ்வை, எம்மால் வாழ முடியுமா என்பதை ஆய்வு செய்யவும், மன்னார் திருக்குடும்ப சகோதரிகள் இல்லத்தில் ஒன்று கூடினோம்.

க.பொ.த உயர் தரம் சித்தியடைந்தவர்களும், பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தவர்களும், மறையாசிரியர்களாக, ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களே நாம். எனினும் எமக்கென்று ஒரு வாழ்வைத் தெரிந்தெடுப்பதற்கென இங்கு வந்த வேளையில் ஒருவித பதட்டம், பயம், அங்கலாய்ப்பு, எம்மால் இந்த வாழ்வை வாழ முடியுமா என்ற வினா ஆகியவற்றுடனேயே வந்தோம். ஆனால் நாம் இங்கு வாழ்ந்த இரண்டு மாத காலத்தில் இதற்கான விடையையும் தெளிவாகப் பெற்றுக் கொண்டோம். இந்த இரண்டுமாத காலத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் ஆகியோரால் பல்வேறு விடயங்களில் எமக்கு அறிவு புகட்டப்பட்டது. உளவியல் ரீதியாக எம்மைப்பற்றியறியவும், எமது அழைப்பு, பிரச்சனைகள், எவ்வாறு வாழ்தல் என்பது பற்றி எமக்கு விளக்கமளிக்கப் பட்டது. நான் ஏன் வந்தேன். இனி என்ன செய்யப் போகிறேன், என்பன போன்ற வினாக்களை எழுப்பி படம் மூலம் விளக்கப்பட்டது. மற்றும் ஆன்மீக ரீதியில் - எமது வாழ்வானது செபம், நற்கருணை, இறைவார்த்தை, ஆகியவற்றின் அடித்தளத்தில் கட்டப்படல் வேண்டுமென்றும், அப்படியாயின் எமது வாழ்வில் எவ்வித புயலடித்தாலும், பிரச்[illegible]னைகள் எழுந்தாலும் ஆட்டம் காண மாட்டோம் என்பதையும் அறிந்து கொண்டோம்.

குழும வாழ்வில் எமது முகமூடி[illegible]யக் கிழித்து எறிந்து உண்மை நிலையுடன் வாழ்தல் அவ[illegible]யம் என்றும், இத்தகைய குழுமவாழ்விற்கு தியாகம், த[illegible]ழ்ச்சி, பொறுமை, சாந்தம், ஏற்றுக்கொள்ளல், புரிந்துணர்[illegible], அவசியம் என்பதையும் அறிவுரீதியாகவும் சிறிதுகால அனுபவரீதியாகவும் அறிந்து கொண்டோம். துறவு வாழ்வு [illegible]றால் என்ன என்று அறிந்து கொண்ட நாம் திருக்குடும்ப[illegible]பத் துறவு வாழ்வு, இதன் நிறுவுனர், ஆரம்பம், பணிகள் ஆகியவற்றைப்பற்றி போதியளவு விளக்கத்தைப் பெற்றுக்கொண்டோம். மானிட, கிறிஸ்தவ விழுமியங்கள் பற்றியும், நாம் எமது வாழ்வில் கிறிஸ்தவ விழுமியங்களைக் கைக்கொண்டு வாழவேண்டும் என்பதையும் புரிந்து கொண்டோம். மற்றும் ஆங்கில அறிவு, பாடல் பயிற்சி ஆகியவையும் எமக்கு அளிக்கப்பட்டது.

எனவே இந்த இரண்டு மாத காலத்தில் செபத்தின் மீது எமது வாழ்வு கட்டப்படல் வேண்டும் என்பதிலும், நாளாந்தம் இறைவார்த்தையின் ஒளியில் எமது வாழ்க்கைப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப்படல் வேண்டும் என்பதிலும், எமக்குத் துறவற வாழ்வுக்கான அழைத்தல் உண்டு. எம்மால் இந்த வாழ்வை வாழமுடியும் என்பதிலும் உறுதிப்பாடு அடைந்துள்ளோம். எமக்கு உருவாக்கம் அளிக்கப்படுகிறது. ஆயினும் எனது உருவாக்கத்திற்கு நானே பொறுப்பு. நானே என்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டோம். இறுதியாக இந்த இரண்டு மாதகால வாழ்வும், பயிற்சியும் எமக்குப் பயனுள்ள விதத்திலும், மகிழ்ச்சி நிறைந்த விதத்திலும் அமைந்திருந்தது என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். எமக்கென்று ஒரு நேர அட்டவணை இருந்தது. அதன்படி குறித்த நேரத்தில் குறித்த காரியத்தைச் செய்ய, ஒருவர் ஒருவரின் கருத்துகளுக்கு முக்கியத்துவமளித்து, மதித்து வாழ, வேதாகமம் வாசிக்க, உள்ளார்ந்த ரீதியில் அமைதி காக்க, நற்கருணை சந்திக்க, கையளித்தல், பொறுப்புணர்வு, கீழ்ப்படிதலுடன் வாழ எம்மையே நாம் மாற்றியமைத்துக் கொண்டோம். இடம் புதிது, ஆட்கள் புதிது, எப்படி வாழப்போகிறோம் என்ற அங்கலாய்ப்புடன் வந்த நாம் 30.11.2001 பயிற்சி முடிந்து வெளியேறும்போது நாம் இங்கேயே வாழக்கூடாதா, மீண்டும் எப்போ எம்மை அழைப்பார்கள் எனும் மனவுணர்வுடனும் மீண்டும் விரைவில் சந்திப்போம் எனும் உறுதிப்பாட்டுடனும் பிரிய மனமின்றி எமது இல்லங்களுக்குச் செல்கின்றோம். இப்பயிற்சியினை ஒழுங்கு செய்து எமக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த மாகாணத் தலைவி, ஆலோசகர்கள், மற்றும் எமக்கு வழிகாட்டி, நெறிப்படுத்திய அருட்தந்தையர்கள், அருட்சகோதரர், அருட்சகோதரிகள், ஆங்கில அறிவு புகட்டிய ஆசிரியர், பல்வேறு வகையிலும் எமக்கு உதவிகள் நல்கிய அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். தகவல், பங்குபற்றியோர்.

வந்து பாருங்கள் என்ற அழைத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் ஆனி மாதம் 3ந் திகதி [illegible]தாடக்கம் ஆடிமாதம் 14ந் திகதி வரை இடம்பெற உள்ளது. இறை அழைத்தலில் ஆர்வமுள்ள இளம் பெண்[illegible]ள் திருக்குடும்ப கன்னியர்களோடு தொடர்பு கொள்ளவும்.




**புனிதர் பொன்மொழி**

"மண்ணில் சிலுவை தூங்காதவர் விண்ணில் மகிமையின் முடி தூங்குவதில்லை"
- புனித சார்ள்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம் மாதாவின் வணக்க மாதம்

# அன்னைக்கு கரம் குவிப்போம்!


அருட்சகோதர கனிசியஸ்,
திருக்குடும்ப கார்னியர் மடம்,
மன்னார்

திருச்சபைத் தாயானவள் வைகாசி, ஐப்பசி மாதங்களை மரியன்னையின் வணக்கத்திற்கென அர்ப்பணித்துள்ளாள். அதனால்தான் வைகாசி மாதம் மரியாளின் வணக்க மாதம் என்று எம் முன்னோர்களால் அழைக்கப்பட்டு மரியன்னையின் புகழ்பாடும் மாதமாகக் கொண்டாடப்பட்டது, கொண்டாடப்படுகின்றது.


நம் அன்னை மரியாள் இயேசுவின் தாய் மட்டுமல்ல நம் அனைவரின் தாயுமாவார். இவ் அன்னை அன்று எவ்வாறு தம் அன்பு மகன் இயேசுவைப் பேணிக்காத்தாரோ அவ்வாறே இன்றும் எம்மைக் காத்து வழிநடத்தி வருகின்றார். அன்று கல்வாரி மலையில் இயேசு தன்னுடைய அன்னையை நம் எல்லோருடைய அன்னையாகவும் அளித்தார். இந்த அன்பு அன்னை உலக மாந்தரின் துயர் துடைக்கும் தாயாக, பரிந்து பேசும் அன்னையாக இருக்கின்றார். ஆகவே அந்த அன்னையின் புகழைப் பரப்புவது எம் கடமை. நம் அனைவரின் வாழ்விலும் இறையருளைப் பெற்றுத்தரும் கருவியாக இருப்பவர் நம் அன்புத் தாய். இந்தத் தாயின் புகழைச் சாற்றுவதும் அவரை ஏற்றிப் போற்றுவதும் நம் அன்னையைப் பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்புவோருக்கு உண்மையை எடுத்துக்கூறுவதும் நம் கடமை.

அளவில்லாக் கருணையும், ஞானமுமுள்ள கடவுள் உலகை மீட்க ஆவல் கொண்டு காலம் நிறைவேறியபோது நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார். (கலா. 4: 4 - 5) இந்த மகன் .......... தூய ஆவியினால் கன்னிமரியிடம் உடல் எடுத்தார். வானவர் தூது சொன்னதும் கன்னிமரியாள் தன் உடலிலும் உள்ளத்திலும் கடவுளின் வார்த்தையை ஏற்றார். வாழ்வை உலகிற்கு அளித்தார். எனவே அவர் உண்மையாகவே கடவுளும், மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப்பெற்றுப் போற்றப் பெறுகின்றார். இவர் கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், சிறப்பாக நம்பிக்கை கொண்டோரின் தாய். கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக திருச்சபையிலே மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றவர் நம் அன்னை மரியாள்.

ஒரு பெண்ணால் சாவு வந்ததுபோல் மற்றொரு பெண்ணால் வாழ்வும் வர வேண்டும் என்பதற்காக கிறிஸ்து மனிதர் ஆவதற்கு முன்பே அவரது தாயாக முன்னியமிக்கப்பட்டவரின் இசைவு பெற வேண்டுமென்று தந்தை ஆவல் கொண்டார். இந்த ஆவல் அன்னையிடத்தில் சிறந்த முறையில் நிறைவேறுகின்றது.



எனவே இறை அன்னை முற்றிலும் தூயவர். பாவக்கறை ஏதும் இல்லாதவர். இதனால்தான் தூது சொல்ல வந்த வானவன் அருள்மிகப் பெற்றவரே என்று (லூக் 1: 28) வாழ்த்துகிறார். வாழ்த்தொலியை உள்வாங்கிய இக்கன்னியும் நான் ஆண்டவரின் அடிமை உமது சொல்படியே எனக்கு நிகழட்டும் (லூக்.1:38) என்று பதில் கூறுகின்றார். தன் முழு இதயத்தோடு கடவுளின் மீட்புத்திருவுளத்தை ஏற்று தம் மகனுக்கும் அவரது பணிக்கும் தம்மையே முற்றிலும் கையளிக்கின்றார். எனவே மரியாள் கடவுளின் கரங்களில் செயலற்ற ஒரு கருவியல்ல. வாழ்வுக்குத் தன்னுரிமையுடன் ஒத்துழைத்தவர். தன் திருமகனைக் கருத்தாங்கிய அந்த நேரம் முதல் தன் மகனோடு கொண்ட ஒன்றிப்பை சிலுவை வரை விடாது காத்து வந்தார். கடவுளின் திட்டத்திற்கேற்ப சிலுவையடியில் நின்றார் (யோவான் 19:25). தன் ஒரே மகனோடு கடுமையாகத் துன்புற்றார்.



தாயுள்ளத்தோடு தன்னையே அவரது பலியுடன் இணைத்தார். தான் பெற்றெடுத்த மகனைப் பலியிடவும் அன்புடன் இசைந்தார். இறுதியாக அம்மா இதோ உம் மகன (யோவா 19:26-27) எனும் வார்த்தை மூலம் யோவானின் உருவில் மனுக்குலம் முழுவதையும் தம் அன்புப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். இறுதியாக மாசற்ற கன்னி ஆதிப் பாவக்கறை ஏதுமின்றி பாதுகாக்கப்பெற்று தம் மண்ணுலக வாழ்வு நிறைவுற்றதும் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றார். அனைத்துலக அரசியாகக் கடவுளால் உயர்த்தப் பெற்றார்.

இவ்வாறு கன்னிமரி இவ்வுலகில் இறைமீட்பரின் அன்னையாகவும் ஆண்டவரின் உடன் உழைப்பாளியாகவும், மனத்தாழ்மை கொண்டவராகவும், கீழ்ப்படிதல், நம்பிக்கை, எதிர்நோக்கு பற்றியெரியும் அன்பு கொண்டவராகவும் வாழ்ந்தார். இதனால் தான் மரியாள் அருள் வாழ்வில் எமக்கு அன்னையாகத் திகழ்கின்றார். இந்த மரியன்னை தனது விண்ணேற்றத்தின் பின்னும் தனது பணியை விட்டுவிடவில்லை. மாறாகப் பலவிதங்களில் எமக்காகப் பரிந்து பேசி பற்பல இடங்களில் காட்சிகள் அளித்து நிலையான நிறைவாழ்வையடைய எமக்குத் தேவையான கொடைகளை அளித்து அறிவுரை புகட்டி தனது விருப்புக்களையும் வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார்.

## பத்திமாபதியில் மாதாவின் விண்ணப்பம்

எனவே இந்த அன்னைக்கு நாம் செய்ய வேண்டியது யாது? இந்த அன்பு அன்னை எம்மிடம் வேண்டி நிற்பது யாது? நம் காலத்தில் கடவுள் மிக அவசரமாக விரும்பும் ஓர் ஆவலை, பத்திமாபதியில் மாதா வெளிப்படுத்தினார். அதுதான் மாதாவின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணம். இந்தச் செய்தியின் விளைவாக அரசியல், சமுதாய, ஆன்மீக நிகழ்ச்சிகள் பல நம்பமுடியாத அதிசயங்களாக நிகழ்ந்துள்ளன. மரியாளின் மாசற்ற இதயத்துக்கு அர்ப்பணமாகும்போதுதான் ஒன்றிப்பும், அருளும் திருச்சபைக்கும் உலகிற்கும் கிடைக்கும். ஏனெனில் அவரே ஒன்றிப்பின் அன்னை. உலகின் ஒன்றிப்பையும், அமைதியையும் ஆண்டவர் அந்த் அன்னையிடம் ஒப்படைத்துள்ளார். ஆர்வம் மிக்க இந்த ஒன்றிப்பு ஆவலை நாம் நிறைவேற்ற வேண்டுமாயின் அவரைப்போல நாமும் அவரருளால் நம்மிடையே ஊழியர்களாக வேண்டும்.

இறுதியில் என் இதயம் வெற்றிபெறும் என்பது 1917ல் பத்திமா அன்னை நமக்கு அருளிய உறுதிப்பாடு. அதனை நாம் கருத்துடன் கவனித்து மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாம் எளிதாகவும், ஆர்வத்துடனும் ஆகட்டும் என்று சொல்லி எம்மை மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்கும்போது அவரது வெற்றிக்காக உழைக்கும் தூதுவர்களாக எம்மை ஆக்கிக் கொள்கிறோம். அந்த ஆகட்டும் என்பது இன்பங்களையும், துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் உள்ள ஒரு நிலைப்பாடு. நாம் அன்னையின் சொற்களில் பேசவேண்டும், அவர் எம் நாவின் வழியாகப் பேசும்படி அவரை அனுமதிக்க வேண்டும். எங்கும் அவருக்குச் சான்று பகர வேண்டும்.

இவ்வாறு நாம் எம்மை மரியன்னைக்கு அர்ப்பணம் செய்ய விரும்பினால் அவரது மாசற்ற இருதயப் பக்திக்கு ஆழ்ந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதற்காக நாம் செய்ய வேண்டிய காரியங்கள் மூன்று.

1. அன்றாடம் செபமாலை செபிக்க வேண்டும். செபமாலை செபிப்பதால் எல்லா எதிரிகளையும் முறியடிக்கின்றோம். எமது வேண்டுதல்களுக்கெல்லாம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வார்த்தையும் அவரது மறைநிகழ்ச்சிக்குள் எம்மை இழுத்துச் செல்லும். அன்றாடம் செபமாலை செபிப்போர் மீட்புப் பெறுவர் ( பத்திமாவில் மரியன்னை செபமாலை என்று கூறியது. பதினைந்து தேவ இரகசியங்கள் அடங்கிய முழுச் செபமாலையை ஆகும்.)
2. ஐந்து முதல் சனிக்கிழமைப் பக்தியை அனுசரிக்க வேண்டும்.
3. எமது விண்ணப்பங்களை மரியன்னையிடம் எடுத்து வந்து அவரை எமது அன்னையாகக் கொள்ளவேண்டும்.

(இவை பத்திமாவில் மரியன்னை அளித்த செய்திகள்)

## வளர்ந்து வரும் மரியன்னை பக்தி

கடந்த ஓரிரு தசாப்தங்களைக் காட்டிலும் தற்பொழுது மரியன்னை மட்டிலான பக்தி, விசுவாசம், வளர்ச்சியடைந்து வருவது கண்கூடு. அன்பியங்கள் ஒன்றிணைந்து செபமாலை செபித்தல், அன்னையின் திருச் சொரூபம் இல்லங்கள் தோறும் எடுத்துச் செல்லப்பட்டு வழிபாடு செய்தல், அன்னையின் திருநாட்களை விமரிசையாகக் கொண்டாடுதல், அன்னையின் திருத்தலங்களுக்கு யாத்திரை செய்தல் இவை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் எமது மக்கள் முன்னணியில் திகழ்வது மகிழ்ச்சிக்குரியதே. அன்று 2ம் உலகப்போரின் தாக்குதலிலிருந்து எம் நாட்டைக் காத்த மரியன்னை இன்றும் எமக்கு உதவி நல்க விரைகின்றார்.



தற்பொழுது நாம் சுவாசிக்கும் சமாதானக்காற்று கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையின் பல பாகங்களுக்கும் திருப்பவனி சென்ற மடு அன்னையின் பரிந்து பேசுதலாலும், தலையீட்டாலும் ஏற்பட்டது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆம்! சமாதானக் கீற்று எம்மிடையே தோன்றியுள்ளது. இந்தச் சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டுமாயின் மாதாவின் பிள்ளைகளிடம் ஒற்றுமை துலங்க வேண்டும். நம் இதயங்களிலும் நம்மிடையேயும் நாம் அனுபவிக்கும் ஒருமைப்பாடே மாதாவின் மாசற்ற இதய வெற்றியின் வலிமைமிக்க அடையாளமாகும். எனவே நாம் ஒருமைப்பாட்டைக் காணவேண்டுமெனில் நமக்குள் உள்ள கசப்பான உணர்வுகளையும், அனுபவங்களையும் களைந்தெறிவோம். கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு நிற்கவோ புகார் கூறிக்கொண்டு நிற்கவோ முனையாது மாதாவின் திட்டத்திற்கு ஆகட்டும் என்று அனைவரும் சேர்ந்து சொல்வோம். அந்த அன்னையின் வழிநடத்தலின் கீழ் ஒன்றிணைவோம். அவரது போர்வைக்குள் நாம் ஒன்று சேருவோம்.

பரவட்டும் மரியன்னை பக்தி - நிலவட்டும் ஒற்றுமை!

## பாயிலே படுத்தபோதும் பசிதீர்க்கும் உன்பேர் அம்மா!

வாயிலே மடு மாதாவே
  வார்த்தையை உரைக்கும்போது
நேயத்தின் தேனை அள்ளி
  நெஞ்சிலே ஊற்றுகின்றாய்!
சேயினை வளர்த்தாய் காத்தாய்
  சிலுவையின் பின்னே சென்றாய்
பாயிலே படுத்தபோதும்
  பசிதீர்க்கும் உன்பேர் அம்மா!

பூமழை சொரியும் உன்பேர்
  பொன்மழை பொழியும் உன்பேர்!
பாமழை பொழியும் உன்பேர்
  பால் பழம் தேனும் பெய்யும்!
கோமகன் இயேசு கூறு
  கூப்பிட்ட அம்மா என்ற
நாமத்தை அன்றி வேறோர்
  நயந்தரும் சொல்லும் உண்டோ?

மலர்களில் புனைந்தமேனி
  வானத்தை தொட்ட சொற்கள்!
நிலந்தனில் தெய்வம் வாழ்ந்த
  நேசத்தின் கோயில் நீயே!
அலர்ந்திடும் உன்பேர் சொன்னால்
  அற்புத சுவையே நாவில்
உலர்ந்திடும் உலகத் திக்கில்
  ஊற்றுவாய் அன்பு மாரி!

புலவர் மணி - அமுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## சிறுவர் சிறுகதை

### காவல் சம்மனசு



வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. விலையுயர்ந்த சாமான்கள் அனைத்தையும் வெளியில் தூக்கி எறிந்தார்கள். நெருப்பை அணைக்க மக்கள் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. தீ மேலும் எழும்பிக்கொண்டே போனது. திடீரென மக்கள் உயர நோக்கினார்கள். நான்காவது மாடியில் இருந்த இரு சிறு பெண்களை தாங்கள் காப்பாற்ற மறந்து போனதைக் கண்டனர். இனி அவர்களைக் காப்பாற்ற முடியாது, அவர்கள் நெருப்பில் வெந்து மாள வேண்டியதுதான். இருவரில் மூத்த பெண் தன் தங்கையைப் பார்த்து "ஜொவன்னா, ஆபத்து நேரத்தில் காவற் சம்மனசைப் பார்த்து ஜெபித்தால் அவர் உதவி செய்வார் என்று பள்ளிக்கூடத்தில் சொல்லி தந்திருக்கிறார்கள். இப்பொழுது நான் அவரை நோக்கி செபித்து விட்டுக் கீழே குதிக்கிறேன். நான் சாவேனானால் நீ கீழே குதிக்க வேண்டாம். நான் பிழைத்துக் கொண்டால் நீயும் அவரைப் பார்த்து செபித்துவிட்டுக் கீழே குதி" என்றாள்.

"என் காவற் சம்மனசே, என்னைக் காப்பாற்றும்" என மூத்தவள் மும்முறை சொல்லிக் கொண்டே கீழே குதித்தாள். இதைக் கண்ட பெற்றோர் "ஐயோ, நம் கண்முன் பரிதாபமாகச் சாகப் போகிறாளே" என்று பயந்து அலறினார்கள். சிறுமியோ பூப்போல் தரையை அடைந்தாள் அவளுக்கு எவ்வித தீமையும் நேரிடவில்லை. பின் இளையவள் தன் காவற்சம்மனசை நோக்கி செபித்துவிட்டுக் கீழே குதித்தாள்.

அவளும் எவ்வித ஆபத்துமின்றி தப்பித்துக் கொண்டாள். உடனே அனைவரும் காவற்சம்மனசுக்கு நன்றி கூறி செபித்தனர்.

"உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்கு கட்டளையிடுவார்" (லூக் 4: 10)

கடவுளின் தூதர் அவரை நோக்கி, "நான் உம் மகனை நலமே கூட்டிப்போய் நலமே உம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பேன்" என்றார்

சு. செரின் ருக்ஸ்சினி, தரம் - 9
(மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி,
எமில் நகர், மன்னார்.

## சிறுவர் தொடர் கதை

### புனித லொயலா இஞ்ஞாசியார்

அங்கம் 11



41. இயேசு சபைக்கு பாப்பரசர் ஒப்பந்தம் அளித்தபின் இஞ்ஞாசியாரும் அவரது தோழர்களும் குருப்பட்டம் பெற்றனர். குருப்பட்டம் பெற்றபின் பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று அவர்கள் போதிக்கத் தொடங்கினர். அவர்களின் போதகத்தைக் கேட்ட அநேகம் பேர் வியந்தனர்: மனம் மாறினர்.

42. வியாதி உற்றவர்களுக்குப் பணிபுரிவது இயேசு சபையினருக்குப் பிரியமான வேலைகளில் ஒன்றாகும். இஞ்ஞாசியாரே இப்பணியில் முதல்வராக நின்று பணியாற்றினார். எப்பொழுதுமே வியாதியுற்றவர்களையும் எளியவரையும் நேசித்து வந்தார். பல முறை மருத்துவ மனைக்குச் சென்று வியாதிக்காரர்களைச் சந்தித்து அன்போடு பேசுவார்.

43. மேலும், பாவிகளை மனந்திருப்புவது அவருடைய முக்கிய பணிகளில் ஒன்றாக அமைந்தது. அவருக்கு ஒரு பெரும் பாவியைத் தெரியும். அவனுக்கு என்ன சொல்லியும் மனந்திரும்ப விருப்பம் இல்லை. ஒருநாள் அவன் வரும் வழியில் அவனுக்காக இஞ்ஞாசியார் காத்திருந்தார். சாலையின் ஓரத்தில் ஒரு குளம் இருந்தது. அது குளிர் காலம். எனவே குளத்தில் தண்ணீர் மிகமிகக் குளிர்ந்திருந்தது.

44. எதிர்பார்த்த மனிதன் அவ்வழியாக வந்தவுடன் இஞ்ஞாசியார் குளத்திற்குள் இறங்கிவிட்டார். பின் அம்மனிதனைப் பார்த்து, "நீ எப்பொழுதும் கடவுளை நிந்திக்கின்றாய். அவர் உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டார். அவர் உன்னைத் தண்டிக்காது இருக்க நான் உனக்காக இக்குளிர்ந்த நீரில் தபசு செய்கின்றேன்" என்று கூறினார். இஞ்ஞாசியாரின் செயல் கண்டு, அப்பாவி மனம் மாறினான். நல்லவனாக வாழ்ந்தான்.

(தொடரும்)

## சிரிப் 'பூ' க்கள்



நண்பி 1: என்ர புருஷனுக்கு எளிமையா உடுப்பு போடுங்கண்ணு சொன்னது தப்பா போச்சு.........!
நண்பி 2: ஏன்?
நண்பி 1: வெறும் கோவணத்தைக் கட்டிட்டுத்தான் வேலைக்குப் போறாரு!

***

நண்பி 1: என் காதலனுக்கு அடிக்கடி 'ஈமெயில்' அனுப்புங்கன்னு சொன்னது தப்பாப் போச்சு!
நண்பி 2: ஏன்? என்ன நடந்தது?
நண்பி 1: ஈமெயில் அனுப்புறதுக்காகத் தினமும் சாக்கடைப் பக்கமாய்ப் போய் ஈ பிடிக்கிறதுதான் மனுஷனுக்கு இப்பவெல்லாம் வேலையாப் போச்சு!

***

ஒருவர் : என்னங்க அவரு தினமும் நித்திரையில் இருந்து சடுதியா எழும்பி பக்கத்தில் இருக்கிறவங்களை எல்லாம் நாய் மாதிரி கடிக்கிறாரே... ...?
மற்றவர் : அவருக்கு தூக்கத்தில நடக்கிற வியாதி மாதிரி கடிக்கிற வியாதிங்க... ...!

***

நண்பி 1: ரிவியில்ல மழைவரும்னு சொல்லி இருக்காங்க. குடையை எடுத்து வைங்கன்னு என் கணவர்கிட்ட சொன்னத அவர் தப்பா புரிஞ்சிக்கிட்டாருடி ........!
நண்பி 2: எப்படி?
நண்பி 1: குடையை விரிச்சி ரிவி மேல வச்சிட்டார்.

கணவன்:- அடிக்கடி ஒருவன் உன்னிடம் ரெலிபோன்ல பேசி வம்பு செய்வதாகக் கூறினாயே அடுத்த முறை பேசும்போது அவர் அட்ரஸைக் (விலாசத்தைக்) கேளு......!
மனைவி :- எதற்கு?
கணவன் :- உன் போட்டோவை அனுப்பத்தான். அதற்கு பின் வாலாட்ட மாட்டான் பார்!

***

பெண்:- ஏன் டாக்டர், என் கணவர் நிச்சயம் இந்த ஒப்ரேஷன்ல பிழைச்சிடுவார் இல்லையா...?
டாக்டர் :- இப்படி அவசரப்பட்டால் எப்படி! நான் எதையுமே முன் கூட்டியே சொல்லி பின்னாடி அவஸ்தைப்பட மாட்டேன்!

***

நீத்தா : உன் புருஷன் சைக்கிள் மாதிரியா?
சீத்தா : எப்படி ?
நீத்தா: மிதிச்சாத்தான் இவரும் வேலையெல்லாம் செய்வாரு!

***

திருடன் 1: மாப்பிள்ளை, உங்களுக்கு வரதட்சணையா என்ன வேணும்?
திருடன் 2: நகைக்கடை ஒன்றைக் கொள்ளையடிச்சுக் கொடுத்திடுங்க.........!



ஒ நவர்: "ஏன், உங்க வீட்ல ைரக்கம்பத்துல கொடியைப் பறக்க ட்டிருக்கீங்க.........!"
றவர்: "அதுவா.... இன்னிக்கு ங்களோட கல்யாண நாள் ..."

***

ருவர்: ஏன் அந்தக் கடையில ாப்பிர்றவங்க பக்கத்தில பெரிய ல்லை வைக்கிறாங்க?
்றவர்: இவ்வளவு பெரிய கல் ப்பாட்டில் வந்தால் பல் என்ன தியாகும்? நமக்குச் சின்னக் ல்தானே வந்திருக்கிறது என்று ாப்பிடுகிறவர்கள் ஆறுதல்பட்டுக் காள்ளத்தான் ...!

***

ருவர் : "கவர்ச்சி நடிகை வீட்டில் காள்ளையாமே.........!"
மற்றவர் : "ஆமாம், திருடர்களுக்கு நகை பணம் எல்லாம் கிடைத்ததாம். ஆனா, துணி மட்டும் ஒன்றுகூடக் கிடைக்கவில்லையாம் .........!"

## கவிதைப் பூக்கள்





### ஒளியை நோக்கி...!

வையத் தொளி பரவ
மெய்யகத்தே இருளகல
துய்ய பரம் பொருளின்
தூதுவனார் சொல் விளங்கும்.

கன்னி வயிற்றிலொரு
கற்பமென முத்து வர
கண்டீரோ மானிடரே
கண்களிலே திரைவிலக!

மாட்டுத் தொழுவம் தனில்
மனுமகனார் பிறந்ததனால்
மண்ணகத்தார் மனங்களிலே
மறுபடியும் பிறப்பாரன்றோ.

ஈதல் இரங்கலோடு
இன்பம் சேர் சேவை செய்து
காதல் வரும் வரையும்
சகலரையும் அன்பு செய்வோம்.

கற்பு நெறி தவறாது
சகலரையும் அன்பு செய்வோம்
கருமையது விலகட்டும்
கடவுள் ஒளி பரவட்டும்!

வி. வேளாஜினி
ஆண்டு 10
அரிப்பு, முருங்கன்.

### சமாதானம்

அழுகையை நிறுத்து.
கண்ணீர் வடிக்காதே!
உன் உழைப்புக்கு
பயன் கிட்டும்வரை
தொடர்ந்து பயணி.
எதிர் காலத்தில்
நம்பிக்கை வை.
மனதில் உறுதி கொள்.
நாட்டின் சமாதானம் -
கனவல்ல... நனவாகும்!
சமாதானத்திற்காக
தொடர்ந்து போராடு!

A.வினோத்
108, முதலியார்குளம்
செட்டிகுளம்.

### மெழுகுவர்த்தி

வெண்ணிற மெழுகே!
வெண்ணிற உள்ளமே!
ஒளியற்ற எம் வீட்டை
ஒளிர்விக்க வந்தாயே!
பாவியான எங்களை
பரிகசித்து ஒதுக்காமல்
பார்வையற்ற எம்மை
பார்த்திடச் செய்தாயே!
வெண்மை நிறத் திரியே!
எமக்கு ஒளிகொடுக்க
உன்னையே
உருக்கினாயே!
உன் இதயம் தியாகமாக
குருதியையும் சிந்தியதே.

து. ஜெனற் மரீனா
தரம் - 3, அரிப்பு,
மன்னார்.



### அன்புள்ள மக்களாக வாழ்வோம்!

நாம் என்றும் நல்ல கிறிஸ்தவர்களாய் வாழ்வதற்கு எம் உள்ளத்தில் அன்பென்னும் தீபம் மலர வேண்டும்.
இன்றைய உலகில் நாம் எதையும் பணம் கொடுத்து வாங்கலாம் ஆனால் அன்பை மட்டும் வாங்க முடியாது. அன்புள்ளம் கொண்டவர்கள் தம்மிடம் இருப்பவற்றைப் பகிர்ந்து வாழ்வார்கள். எம்மீது கொண்ட அன்பினால் தந்தையாகிய கடவுள் தன் ஒரே மகன் யேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அன்பு இரக்கமுடையது! சாந்தமுடையது! தீயவற்றை நாடாது! நாம் என்றும் அன்புள்ள மக்களாக வாழ்வோம்.

ம. மரிய சகுந்தலா
பெரிய கோமரசன் குளம், வவுனியா.

### உங்கள் சிந்தனைக்கு
### வாழ்க்கையில் தோல்வி என்றால் ..?

☐ வாழ்க்கையில் தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்பது பொருள் அல்ல. மாறாக இன்னும் வெற்றியை அடையவில்லை என்பதே பொருள்.
☐ எதையும் சாதிக்கவில்லை என்று அர்த்தமில்லை. மாறாக சில பாடங்களைப் படித்துள்ளீர்கள் என்பதே பொருள்.
☐ அவமானப்பட்டதாக நினைக்க வேண்டாம். மாறாக முயன்று பார்க்கும் துணிவு உங்களிடம் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.
☐ உங்களிடம் பொருள் இல்லை என்பதல்ல. மாறாக வாழ்க்கையில் வேறு உத்திகளைக் கையாள வேண்டிய அவசியத்தை உணர்ந்து விட்டீர்கள் என்பதே பொருள்.
☐ வாழ்வு வீணாகிவிட்டதல்ல. மாறாக வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்றே அர்த்தமாகும்.
☐ விட்டு விட வேண்டும் என்று பொருள் அல்ல. மாறாக இன்னும் முழுமையாக உழைக்க வேண்டும் என்பதே பொருள்.
☐ உங்களால் முடியாதது என்று பொருள் அல்ல. மாறாக வாழ்க்கையை அடைவதற்கு கொஞ்சம் தாமதமாகும் என்பதே பொருள். எனவே வாழ்க்கையில் தோல்வி என்றால் துவண்டு விடாதீர்கள். நம்பிக்கையுடன் தளர்ச்சி இன்றி முயற்சியில் ஈடுபடுங்கள். வெற்றி உங்களதே.

தொகுப்பு,
பி. மேரிஸ்ரெலா (மயூறா), 7ம் ஆண்டு
படகுதுறை, இலுப்பக்கடவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியத்தின் அவசியம்

## 1. குடும்ப உறவுத் திருச்சபை

ஆதித்திருச்சபை குடும்ப உறவில் உருவானது. அன்னை மரியாள், அப்போஸ்தலர்கள் ஒரு தாய் பிள்ளைகளாக சகோதர சகோதரி உறவில் இணைந்திருந்தார்கள். திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் என்று திருத்தூதர் பணி 2: 42 ல் நாம் படிக்கின்றோம். இந்த அன்பு உறவில், குடும்ப உறவில் ஊன்றப்பட்ட திருச்சபை அன்பில், பகிர்வில் ஆல் போல் தழைத்து கிளை பரப்பி முழு உலகத்திற்கும் நிழல் அளிக்கும் விருட்சமாக அன்று திகழ்ந்தது. ஆனால் காலப்போக்கில் அதன் வளர்ச்சியிலே ஒரு வறட்சித்தன்மை தோன்றி இந்த உறவுகளில் ஒரு விரிசல் நிலை உண்டாகி இருப்பதனை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். எனவே இக்குறைகளைக் களைந்து மீண்டும் எமது திருச்சபையை ஒரு குடும்ப உணர்வுத் திருச்சபையாக உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கு நாம் என்ன செய்யலாம்?

அ, முழு பணித்தளத்திலும் ஒரேடியாக இக்குடும்ப உறவைக் கட்டி எழுப்பி வளர்க்கும் முயற்சியைவிட சிறிய சிறிய குழுக்களுக்குள் இந்த குடும்ப உறவை வளர்த்தெடுத்தல் இலகுவானது.

ஆ, குழுக்களுக்குள் மலரும் இக்குடும்ப உறவு பின்னர் குழுக்களுக்கிடையேயும், பணித்தளத்திலும் பின் பணித்தளங்களுக்கிடையேயும் வளர்க்கப்படலாம்.

கடவுள் மனிதரை குடும்ப உறவில் படைத்தார். ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் (தொ. நூ: 1: 27). இதன்படி புதுப்பிக்கப்பட்ட ஆதிக் கிறீஸ்தவர்களும் எவ்விதமான வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளுமற்ற சமத்துவ சமுதாயமாக வாழ்ந்து வந்தார்கள். 'அவர்கள் ஒன்றாய் இருப்பார்களாக' என்ற இயேசுவின் விருப்பமும் சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்ற அவரது பணியும் ஒருவரையொருவர் ஏற்று அன்பு செய்து வாழுகின்ற மனப்பக்குவமும், எமது இல்லங்களிலும், எமது சமுதாயத்திலும், அனைத்து பணித்தளங்களிலும் சிறு சிறு குழுக்களாக ஊன்றப்பட வேண்டும். இறை பணித்தளம் ஒரு குடும்பம் எனப்படுகிறது. குடும்பம் மறைமாவட்டத்தின் ஓர் உயிரணு என்கிறது வத்திக்கான் சங்கம். இந்த உயிரணுக்கள் பத்துப் பதினைந்து ஒன்றிணைந்து இறை வார்த்தையை மையமாகக் கொண்டு இறையாட்சியின் மதிப்பீடுகளாகிய அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் மலர வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் அனுபவத் துணையோடு அலசி ஆராய்ந்து செயல் திட்டம் தீட்டி ஓர் உறவுச் சமூகத்தை உருவாக்க முயல்வதுதான் இச் சிறு குழுவான அன்பியத்தின் பணி. சாதி, இன பேதமின்றி ஒருவரையொருவர் அறிந்து ஏற்று அன்புறவு மதிப்பீட்டை நோக்கி பயணம் செல்ல வழிசெய்யும் அமைப்பு முறை அல்லது அணுகு முறைதான் அன்பியம்.

## 2. அர்த்தமுள்ள வழிபாட்டிற்கு வழிவகுக்கும் அன்பியம்

வாழ்கையின் யதார்த்தங்களோடு வழிபாடும் வார்த்தையும் இணைகின்றபோது அதன் தாக்கமும் அதிகரிப்பதுபோல பல்வேறுபட்ட வசதி, வசதியீனங்களோடு தங்கள், தங்கள் வதிவிடங்களில் கூடி வருகின்ற இத் திருக்கூட்டமும் தாங்கள் வாழ்வில் சந்திக்கின்ற இன்ப துன்பங்களை ஒருவரோடு ஒருவர் சகோதர உறவோடு பகிர்ந்து கொள்ளவும் ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் செபிக்கவும் இறை வார்த்தையைப் படிக்கவும் அதனைத் தங்கள் வாழ்க்கைச் சூழலோடு பொருத்திப் பார்க்கவும் இங்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அ, ஞாயிறு திருப்பலிகள், விசேட திருவிழாத் திருப்பலிகள், அன்பிய குழுக்களின் பங்களிப்புடன் இன்னும் சிறப்பாக, பக்தி பூர்வமாக சிறப்பிக்க முடிவதுடன் அனைவரும் பங்களித்தோம் என்ற மன நிறைவையும் பணித்தள மக்களுக்கு அளிக்கக் கூடியதாக இருக்கும்.

ஆ, விட்டுக் கொடுத்தல், மற்றவர்களோடு சேர்ந்து திட்டமிடுதல், பங்களித்தல், பிறரையும் பொருட்டாக மதித்தல் போன்ற பண்புகளையும் இலைமறை காயாய் மறைந்திருக்கும் திறமைகளைக் கண்டு பிடிக்கவும் அவற்றை வெளிக்கொணரவும் இது சந்தர்ப்பமாக அமையும்.



## 3. பங்கேற்கும் திருச்சபையை உருவாக்கும் அன்பியம்

இறையாட்சியை இம் மண்ணில் பரப்ப வேண்டியது திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதற்கு பணிக்குருத்துவத்தார், பொது நிலையினர், துறவிகள் அனைவரும் இணைந்து செயல்படுதல் இன்றியமையாததாகும். இதனை குருக்களும் துறவிகளும் மாத்திரம் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானதாகும். இது அனைவரினதும் கூட்டு முயற்சியாக உருவாகுதல் வேண்டும். அன்பிய மக்கள் அனைவரும் அருள் பணியாளருக்கு அப்பணியில் உதவி செய்து அவரது இறையாட்சியை பரப்பும் பணிக்கு தோளோடு தோள் நின்று உதவி செய்வார்கள். இதனால் இப்பணி இறை மக்களால், இறைமக்களுக்காக இறைமக்களுடன் என்ற நிலை உருவாகி அதிகார திருச்சபை மறைந்து அடியவர் திருச்சபை, உருவாகமுடியும். இங்கு அனைவரும் வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், மறைபரப்புப் பணிகளிலும் சமமான முறையில் பங்கு ஏற்கவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும், அவைப்பற்றி கலந்துரையாடவும் வாய்ப்பு ஏற்படும்.

## 4. சமத்துவ சமுதாயம் படைக்கும் அன்பியம்

அன்பியத்தில் இணைக்கப்பட்டுள்ள அடிப்படைக் கிறிஸ்தவ குழுக்களே எதிர்காலத்தில் சமத்துவ சமுதாயம் படைக்க வல்லன. எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக (யோவான் 17:21) என்ற யேசுவின் வார்த்தைகளுக்கேற்ப இங்கு மக்கள் வேறுபாடுகளைக் களைந்து குடும்ப உணர்வோடு கூடிவருவர். முதலாளி, தொழிலாளி, தலைவன், தொண்டன், ஆண்டான், அடிமை நிலை மாறி ஆழுபவரும் ஆழப்படுபவரும் சரிசமம் என்ற உணர்வோடு எல்லோரும் வரவேண்டும். பொருள் படைத்தோர் கிறிஸ்தவ உணர்வோடு ஏழை மக்களுக்கு உதவ வேண்டும். பொதுப் பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டு கூட்டு முயற்சி மூலம் தீர்வு காணப்படவேண்டும். இதனால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அருள் பணியாளர்தான் முடிவு எடுக்கவேண்டும் என்ற நிலை மாறும். குழுக்களின் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கும். பொது நிலையினர் புதுப்புதுக் காரியங்களில் ஈடுபடுவர். நான் வாழ பிறரும் பிறர் வாழ நானும் தேவை என்ற நிலை தோன்றும். நான் நன்கு வாழ வேண்டும் என்றால் ஏனையோரும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணம் உதயமாகும்.

## 5. உறவுச் சமூகம் அன்பியம்

ஆதிதிருச்சபையின் மக்கள் ஒரு திருச்சமூகமாக கூடிவந்தார்கள். ஒவ்வொருவரினதும் தேவைகளில் உடனிருந்து உதவி செய்வதை பழக்கமாகக் கொண்டிருந்தார்கள். நில புலன்களும் பிற உடமைகளும் உடைமையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர்.(தி. ப. 2 : 45) ஆனால் இன்று நடப்பது என்ன? ஞாயிறு திருப்பலிக்கு வரும் திருக்கூட்டம் உடனே கலைந்து விடுகிறது. ஞாயிறு தினம் ஓய்வு நாளாக இருந்தும்கூட திருப்பலியின் கடைசி ஆசீருக்கு முன் புறப்பட்டுவிடும் திருக்கூட்டத்தாரும் நம்மிடையே உண்டு. கோயிலில் அருகருகே அமர்ந்திருந்தும்கூட அருகே இருந்தவர் யார் என்று தெரியாத - புரிந்துகொள்ள விரும்பாத நிலை காணப்படுகின்றது. அருகே அமர்ந்திருந்தவன் யார் என்று தெரியாவிட்டால் அவனது தேவை என்ன? அவனது மனக்குறை என்ன என்று நமக்கு எங்கே தெரியப்போகின்றது? ஆனால் ஒருவரையொருவர் அறிந்து உறவாட பெயர்சொல்லி உரிமையோடு அழைக்கக்கூடிய நிலை உருவாகும்போது ஓர் உறவுச் சமூகம் பிறக்கின்றது. இங்கு யாரும் தனித்து விடப்படுவதில்லை ஒவ்வொரு ஆளும் என் தேவையில் நான் தனியாக இல்லை. எனக்குப் பின்னால் என் சமூகம் இருக்கின்றது என்ற நம்பிக்கை நிலைக்கு வருவர். அவரது தனிமை உணர்வு அகற்றப்படும். குழு மனப்பான்மை உருவாகி மற்றவர் தேவையிலும் அவர் பங்கேற்கக் கூடியவராவார். இங்கு ஒரு குடும்ப உணர்வு அடித்தளத்தில் இருந்து உருவாகும். இவ்வுணர்வில் ஒருவர் தன்னோடும், பிறரோடும் சமூகத்தோடும் இயற்கையோடும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனோடும் ஒப்புரவாகின்றார்.

## 6. திருச்சபையை மக்கள் மயமாக்கும் அன்பியம்

இறைமக்களின் திருக்கூட்டமே திருச்சபை என்கிறது வத்திக்கான் சங்கம். மேல் இருந்து கீழ் நோக்கி என்று திருச்சபையில் இருந்த செயற்பாடுகள் அனைத்தையும் கீழ் இருந்து மேல் என்ற நிலைக்கு இக்கிறீஸ்தவ குழுக்கள் (அன்பியங்கள்) மாற்றமடையச் செய்யும். இச் சிறு கிறிஸ்தவ குழுமங்களில் பங்கு பற்றும் ஏழைகளும், வசதி படைத்தோரும் இணைந்து முன் வைக்கும் செயற்திட்டங்கள் பணித்தளங்களில், கோட்டங்களில், மறைமாவட்டங்களில் என்று ஏறிச் சென்று திருச்சபையின் கருத்தாக மாறும். அருள் பணியாளர்கள் பங்குப் பேரவையினர் அன்பிய அங்கத்தவர்கள் சேர்ந்து எடுக்கும் தீர்மானங்கள் பெறுமானம் மிக்கதாக அமையும்.

## 7. தலைமைத்துவப் பண்பைத் தரும் அன்பியம்

அன்பியக் குழுக்களிலே நிலையான தலைவர், செயலாளர் என்ற நிலை இல்லை. இருப்பினும் தலைவர் நிலையில் இருக்க அனைவருக்குமே வாய்ப்புக் கிடைக்கும். இதன் மூலம் அனைவரினதும் தலைமைப் பண்பு வளர - பங்கு பேரவைக்கு தகுதியான உறுப்பினர்கள் தெரிவாக ஒவ்வொருவரின் திறமைகளும் வளர்க்கப்பட சந்தர்ப்பங்கள் கிடைக்கும். திருக் கூட்டத்தாரை வழி நடத்தவும், அவர்கள் முன் பேசவும், சாதாரண மக்களும் தகுதி பெறுகின்றார்கள். இன்னும் சிறப்பாக ஒவ்வொரு அன்பியத்திலும் கலைக்குழு, திருவழிபாட்டுக் குழு, குடும்ப நல்வாழ்வுக் குழு, ஆலோசனைக்குழு, சிறுவர் குழு, போன்றவை அமைக்கப்பட்டால் ஒரு ஒட்டு மொத்தமான கூட்டு முன்னேற்றம், தலைமைப்பண்பு பணித்தளங்களில் உருவாகும்.

## 8. புதுப் பிறப்பாகும் அன்பியம்

குடும்பத்தில் இருந்து சமுதாயம் மலர்கின்றது. இதே போல பணித்தளங்களில் உள்ள எல்லாக் குடும்பங்களும் சிறு சிறு குழுக்களாக கூடிவந்து தங்களுக்கு முடிந்தவற்றை பணித்தளங்களில் ஆற்றும்போது கிறிஸ்தவ சமூகம் கட்டி எழுப்பப்படுகின்றது. இங்கு வேறுபாடுகள் களையப்படும், ஒற்றுமை பெருகும், தனித்து விடப்பட்டோர் கவனிக்கப்படாதோர் என்று யாரும் இருக்கமாட்டார்கள். இதுவே யேசு கண்ட இறையாட்சி சமுதாயமாக இருக்கும்.

இவ்வாறு கிறிஸ்தவ சமூகத்தைப்போல நம் பணித்தளங்களில் ஓர் உறவுச் சமுதாயம் படைக்க முன்வருவோம். நமது வாழ்க்கையை நற்செய்தி ஒளியில் அலசி, இறை நம்பிக்கையை ஆழப்படுத்துவதும், ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து அனைவரும் இணைந்து செபிப்பிப்பதும், பிறரது இன்ப துன்பங்களில் எல்லோரும் பங்கேற்கச் செய்வதும் இன்றியமையாததாகும். இறை மக்கள் மனங்களில் பகிர்தல் மனப்பான்மையை உருவாக்குவதும். இணைந்து திட்டமிட்டு செயல்படுவதும் இதைத் திறனாய்வு செய்வதும் சிறு சிறு குழுக்களிலே எளிதாக அமையும். இச் சிறு குழுக்களிலே அன்பியங்களிலே உள்ள திறமைகளை இனங்கண்டு வளர்க்கவும் அவற்றைப் பயன்படுத்தவும் இலகுவாக வாய்ப்புக் கிடைக்கும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தலைமைத்துவப் பண்பை உருவாக்கவும். அந்தத் தலைமைத்துவப் பண்பைக் கொண்டு சமூக நலனையே மனத்தில் இருத்தி சமூக, பொருளாதார, அரசியல் காரியங்களில்கூட விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றில் மக்களை ஈடுபடுத்தவும் கூடியதாகவும் அமையும். மறைமாவட்டப் பேரவையின் செயற்பாட்டை அடி மட்டத்திற்கும் அடி மட்ட மக்களின் வேண்டுகோள்களை மறைமாவட்டப் பேரவைக்கும் கொண்டு செல்லக் கூடியதாக அமையும். இவை நிறைவேறும் சமயத்தில் இறைவன் கண்ட இறையாட்சியும், புதுச்சமுதாயமும் உருவாகும் என்பதில் ஐயமில்லை. (நன்றி - தொண்டன்)

## என் இனிய கதை - திருவிவிலியம் பேசுகிறது

என் பெயர் விவிலியம். உங்களில் சிலர் நான் ஒரு சாதாரண புத்தகமென நினைக்கிறீர்கள். இல்லை, இல்லை. நான் ஒரு சாதாரண புத்தகம் அன்று. ஏனென்றால் எனக்காகப் பலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். பலர் உயிரோடு எரிக்கப்பட்டிருக்கின்றனர். பலர் நாடு கடத்தப்பட்டிருக்கின்றனர். பலருடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டு வேட்டையாடப்பட்டிருக்கின்றனர். இதெல்லாம் எதற்காக? இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இறைவார்த்தை பாப்பிரஸ் சுருள் மற்றும் தோல் சுருள்களில் எழுதப்பட்டிந்த காலகட்டத்தில் நான் எளிய மக்கள் கைகளிலும் போய்ச் சேரவேண்டுமென சிலர் பெரு முயற்சி எடுத்தனர். இலத்தின் மொழியில் எழுதப்பட்ட நூல் குருக்களால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதைச் சாதாரண மக்கள் படிக்கவோ அதற்கு விளக்கம் கூறவோ முடியவில்லை. சாதாரண மக்கள் இறைவார்த்தையைப் படிப்பதற்குப் பெரும் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. 1832ல் விவிலியம் எனும் என்னை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயன்ற யோண் விக்லிப என்பவர் கிறிஸ்தவ மறையில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் அவரது எலும்புகள் கல்லறையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுச் சாம்பலாக எரிக்கப்பட்டு ஆற்றில் எறியப்பட்டது.



என்னைப் படித்தபோது எளிய மக்கள் ஆன்ம விழிப்புணர்வு பெற்றனர். இறைவன், வில்லியம் டிண்டேல் (1494 - 1536) என்பவரைத் தூண்டி விவிலியம் என்னும் என்னை எபிரேயம் மற்றும் கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கச் செய்தார். இதனால் அவர் துன்புறுத்தப்பட்டார். இங்கிலாந்திலிருந்து தப்பி கம்பேர்க், கொலோன் மற்றும் வோம்ஸ் ஆகிய நகர்களுக்கு அவர் ஓட நேர்ந்தது. இதற்கிடையில் அச்சடிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலில் புதிய ஏற்பாட்டு நூல்கள் அச்சடிக்கப்பட்டு, பருத்தி, பஞ்சுக் "கட்டுக்களுக்குள் மறைக்கப்பட்டு" இங்கிலாந்துக்கு நான் கடத்தப்பட்டேன். புரிந்து கொள்ளாத குருக்களின் அவை தங்கள் பிரதிநிதிகளை பருத்தி வியாபாரிகள் என்ற போர்வையில் அனுப்பி டின்டேல் என்பவரைக் கண்டுபிடித்து இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தனர். 1536 அக்ரோபர் 6ல் அவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டு மரத்தில் கட்டி எரிக்கப்பட்டார். அவர் எனக்காக எத்தனை தியாகம் செய்திருக்கிறார் என்று பாருங்கள் . அவர் செய்த ஒரே குற்றம் புதிய ஏற்பாட்டு நூல்களைப் பாமர மக்கள் மத்தியில் சேர்த்ததுதான். இதை நீங்கள் உணர்கிறீர்களா?

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் வாழ்வியல் போராட்டமும் சிலுவையும்

## (ஒரு இறையியல் கண்ணோட்டம்)

ஸ்ரனி அன்ரனி (OMI) உரோமை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இயேசுவின் பணி வாழ்வும் மக்களுக்கு விடுதலை அளிப்பதாகவே அமைந்தது. இயேசு சட்டங்களைவிட மனிதரின் வாழ்வையே முதன்மைப்படுத்தி பணியாற்றினார். இயேசுவின் பணி வாழ்வு உண்மையின் அடித்தளத்தில் ஊன்றிய வாழ்வாகும். இயேசு மானிடருக்கு விடுதலை அளிக்க வந்தாலும் பிறருக்கு துன்பத்தை அளிக்கவில்லை. “என் ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டே வந்துள்ளேன்” என்று கூறியுள்ளார். மலைப்பொழிவிலும் மானிடரின் நிறைவாழ்வை வலியுறுத்தி நிற்கின்றார் (மத் 5: 48). இயேசுவின் இறையரசு பற்றிய பார்வை மனிதருக்கு நிறைவாழ்வை அளிப்பதையே மையமாகக் கொண்டுள்ளதை அறியலாம். இன்று எமது வாழ்வியல் போராட்டத்திலே இயேசுவின் பார்வையை ஒத்ததாகவே எமது பார்வையும் அமைதல் அவசியமாகின்றது. இறையரசு என்பது இறைவனின் ஆட்சியை நிலைநிறுத்துதலாகும்.

கைகளைக்கட்டி மௌனம் காத்து இறையரசு வரவேண்டும் என்று வேண்டினால் மட்டும் எமது தமிழர் தாயகத்தில் இறையரசு மலர்ந்து விடாது. இயேசுவின் பணிவாழ்வின் ஆரம்பமே இறையரசு வந்து விட்டது என்ற அறைகூவலோடுதான் ஆரம்பமாகின்றது. (மாற்கு 1: 15). குறிப்பாக தீமைகளை, மடிவுகளை, அநீதிகளை சந்திப்பதால் மட்டும் அல்லது அவற்றோடு வாழப்பழகுவதால் மட்டும் இறையரசுக்கான வித்துக்களை விதைக்க முடியாது. இவற்றிற்கு அப்பால் மனிதன் கண்டடைய வேண்டிய நிறைவாழ்வை நோக்கி நகருதலே முக்கியமானது.

இயேசுவின் பணி வாழ்வும் மனிதரின் வாழ்வை மையப்படுத்தியே அமைந்தது. அவரது பணிவாழ்வில் சவால்களை முரண்பாடுகளை எதிர்கொண்டாலும் மானிடருக்கு வாழ்வு அளிப்பதே அவரது இலட்சியமாக இலக்காக அமைந்தது. ஒரு முழு மனித - நிறைவான வாழ்க்கை பற்றிய பணியாகவே அவரது போதனைகளும் செயல்களும் அமைந்தன. இன்றைய தமிழர் வாழ்வில் சாவுகள் மடிவுகள் இழப்புக்கள் சாதாரணமாகி விட்டன.



இன்று மரணங்கள் யாருடைய வாழ்விலு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரியவில்லை. ஏதோ ப கப்பட்ட நிகழ்வாக மாறும் நிலையைக் காண்கின்றோம். வெறும் எண்ணிக்கை (Score) சார்ந்த ஒரு மனித அவலமாகவே இன்று மரணம் நோக்கப்படுகின்றது. ஆனால் இயேசுவோ காணாமல் போன ஒரு ஆட்டைத் தேடி கண்டு பிடிக்க 99 ஆடுகளை விட்டு செல்லும் ஆயனாகவே எமக்குத் தம்மை வெளிப்படுத்துகின்றார் (லூக் 15: 4-7). மனித வாழ்வில், இறைவன் படைப்பில் ஒவ்வொரு உயிருமே முக்கியமானது என்ற உண்மையை உணர முடிகின்றது. இன்றும் எமது மண்ணின் சாவின் விளிம்பில மடிவுகளின் துயரத்தில் மூழ்கியிருக்கும் ஒவ்வொருவரையும் தேடிச் சென்று ஆற்றுப்படுத்தி வாழ்வு அளிக்க வேண்டியது ஒவ்வொரு மானிடனதும் அழைப்பாகும். இது மத இன மொழி எல்லைகளைக் கடந்த அழைப்பாகும். ஒரு விதத்தில் எல்லை கடந்த (Cross-Border) (discipleship) சீடத்துவத்திற்கான அழைப்பாகும்.

ஈற்றில், தவக்காலம் இயேசுவின் பாடுகளை சிலுவையை உயிர்ப்பை இரை மீட்டிப் பார்க்கும் புனித காலமாகும். சிலுவை வழியிலே

மீட்பும் விடிவும் வாழ்வும் உண்டு என்ற நம்பிக்கையை புகட்டிய கல்வாரிப் பாடத்தை கற்றுக்கொள்ளவேண்டிய காலமாகும். வெறுமனே சிலுவைப்பாதை பக்தி முயற்சிகளால் தபத்தால் ஈகையால் மட்டும் துன்புறும் இன்றைய தமிழ் இயேசுவோடு இரண்டறக் கலக்க முடியாது. இன்று சிலுவையின் வடுக்களை முகங்களில் தாங்கி வாழும் மனிதரில் இயேசுவைக் கண்டு வாழ்வின் நம்பிக்கையை ஊட்டுகின்றபோதுதான் உயிர்ப்பு ஒரு இறை அனுபவமாக வாழ்வாக பிரசவமாகும். சிலுவை என்ற பிரசவ வழியில்தான் வாழ்வு என்ற உயிர்ப்பு பிரசவமாகின்றது. தமிழர் வாழ்வியல் போராட்டத்திலே சிலுவையின் அடியில் நின்று கொண்டுதான் வாழ்வை எதிர்கொள்ள முடியும். சிலுவையின் மறுபக்கமாகிய வாழ்வை உயிர்ப்பை மையப்படுத்தி சிலுவையை சிறகாக்க முடியும். இயேசுவும் சிலுவையில்தான் - வெறுமையில் தான் எல்லோரையும் ஏற்க முடிந்தது. இந்தச் சிலுவை - வாழ்வு போராட்டத்திலே விளங்கிக்கொள்ள முடியாத ஒரு விந்தையாகும். சிலுவையில்தான் பகிரங்கமாகவே இயேசு கடவுள் மகனாக அறிக்கையிடப்பட்டார் (மாற்கு 15: 39). எனவே தமிழர் வாழ்வியல் போராட்டம் சமத்துவத்துடன் வாழ்வதற்கான உரிமையை சிலுவையின் வழியில்தான் அடைய முடியும் என்ற உண்மையை நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. வெறுமையில் வாழும் தமிழ் இயேசுக்கள் சிலுவையின் மறுபக்கமாகிய வாழ்வை நோக்கிய குறுகிய வாழியில் இடுக்கான வாயில் வழியே பயணத்தைத் தொடர வேண்டும். உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் கொடுக்க வல்லமை உள்ள இறைவன் போரின் அவலத்தால் சுடுகாடாகி நிற்கும் எமது மண்ணிற்கு தொடர்ந்து சிலுவையில் அறையப்படும் எம் சகோதரர்களுக்கு என்றும் வாழ்வின் இறைவனாக விளங்க அவர்களது வாழ்க்கைப் பயணத்தை வழிநடத்த வேண்டும். உயிர்ப்பு எம் தமிழ் மக்களுக்கு வாழ்வை நோக்கிய விடுதலை நோக்கிய வாழ்விற்கு ஒரு இறை அனுபவமாக மாறட்டும் . (முற்றும்)

---

# நிப்போன் புலமைப்பரிசில் சார்ந்த சுற்றுலா

யப்பானில் உள்ள நிப்போன் என்ற நிறுவனம் எம் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இலங்கையில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வசதி குறைந்த மாணவர்களை தெரிவு செய்து அவர்களைக் கல்வியிலும், ஏனைய பண்புகளிலும் உயர்த்துவதே இந் நிறுவனத்தின் நோக்கமாகும்.

இதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இந் நிறுவனம் மாணவர்களின் படிப்பிற்கான உதவிகளை செய்கின்றது. இதற்காகவே நிப்போன் புலமைப் பரிசில் உருவாக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் இவர்கள் எங்களுக்கு உதவி செய்வார்கள். இவ் உதவி மூலம் யாமனைவரும் அனேக நன்மைகளை பெற்று எம் கல்வியை நல் முறையில் கற்று வருகின்றோம். ஒவ்வொரு வருடமும் கொப்பிகள், புத்தகப்பை, பேனா, பென்சில், துணி, குடை, சப்பாத்து, ரீயுசன் பணம் என்பன எமக்கு தரப்படுகின்றன.

2002ம் ஆண்டிற்கான பரிசு வழங்கும் வைபவம் தை மாதம் 6ம் திகதி அனுராதபுரத்தில் விவேகானந்தா வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்காக மாணவர்களும் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு B.S. எமில் குலாஸ் அவர்களும் மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியை சார்ந்த ஆசிரியை செல்வி. சிவச்செல்வியுடனும் நாங்கள் 5ம் தேதி மன்னாரில் இருந்து புறப்பட்டு வவுனியா சென்றடைந்தோம். பின் அடுத்த நாள் அதிகாலையில் எமது பொறுப்பாளர் சுவாமி கல்யாண திஸ்ஸ தேரோ அவர்களுடனும், வவுனியா மாவட்ட மாணவர்களுடனும் அனுராதபுரம் சென்றோம். பின் அங்கே எமது வைபவத்தில் கலந்துகொண்டு எமது பரிசில்களை பெற்ற பின்னர் நாம் சிறிய சுற்றுலாவிற்கு கண்டி செல்ல ஆயத்தமானோம். போகும் வழியில் பண்டுகாபய மன்னன் கட்டிய கலாவாவியையும், வலயத்தின் 46 அடிகளையுடைய அவுக்கண சிலையையும் பார்வையிட்டோம். பின்னர் தம்புள்ளையில் ரங்கிரி விகாரையை சென்று பார்வையிட்டோம். இங்கிருக்கும். புத்தர் சிலை அமர்ந்த நிலை புத்தர் சிலையாகும். பின் அவ் இராப்பொழுதை கண்டியில் அஸ்கிரிய பௌத்த தலத்தில் கழித்தோம். அடுத்த நாள் நாம் தலதா மாளிகையை பார்வையிட்டோம். இங்கே புத்தரின் தந்ததாதுவின் இருப்பிடத்தையும், நூதன சாலையையும் பார்வையிட்டோம்.

பின்னர் கடலாதெனிய விகாரையையும் பின் இலங்காதிலக விகாரையையும் பார்வையிட்டோம். மதிய உணவின் பின்னர் அலுவிகாரையை பார்வையிட்டோம். இங்கு புத்தரின் சயன சிலைகளும், பண்டைய காலத்தில் பாவம் செய்பவர்களுக்கு வழங்கிய தண்டனைகள் சிற்பங்களாகவும் காணப்பட்டன. பின்னர் அதிகாலை 3.30 மணியளவில் வவுனியாவை வந்தடைந்தோம். பின் மன்னார் வந்தோம். இச்சுற்றுலாவின் போது கூண்டுக்கிளியாக வாழ்ந்துவந்த நாம், அக்கூண்டை திறந்துவிடும்போது கிளி எவ்வாறு சந்தோஷத்துடன் பறக்குமோ அவ்வாறே நாமும் மிக சந்தோஷமாக இச் சுற்றுலாவில் கலந்துகொண்டோம். சாதி, மத, குல பேதமின்றி ஒற்றுமையாக இருந்தோம். இச்சுற்றுலாவின் மூலம் நாம் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டோம். பல புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டோம். இச்சுற்றுலாவில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும், வண. கல்யாண திஸ்ஸ தேரோ அவர்கட்கும் இன்னும் எத்தனையோ உதவிகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். இவ் வாய்ப்பு எமக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இறுதியாக இத்தனை வசதிகளையும் ஒழுங்கு செய்து தந்த வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிப்போன் புலமை பரிசில் மாணவி,
ம. கீதா நிக்கலின், தரம் - 11,
புனித சவேரியார் பெண்கள் கல்லூரி,
மன்னார்.

---

# திருமண வாழ்வின் 50ம் வருட நிறைவும் நன்றி நவிலலும்

**திரு. திருமதி. வி. அந்தோனி**

**டபறேறா - முத்தரிப்புத்துறை**



“ ்சொல் நண்பர் தொகையைப் பெருக்கும் ப ான பேச்சு உங்கள் மதிப்பை உயர்த்தும்”

அன் , 1952ம் ஆண்டு வைகாசித் திங்கள் 26ம் நாள் இர ்டு இளம் உள்ளங்கள் திருமணம் எனும் திரு ருட்சாதனம் மூலம் இல்லற வாழ்வில் அடியெடுத்து வை த்தனர். தம் குடும்பமெனும் இன்பப் பூங்காவிலே பெ ்கரிய நற்கனிகள் ஆறினைப் பெற்று உற்றாரும் ம றாரும் வாழ்த்த நலமுடன் வாழ்கின்றனர்.

இ று இவர்களின் அன்புப் பிள்ளைகளாகிய நாம் ி ணைந்து எம் அன்புப் பெற்றோருக்கு திருமண வாழ்வில் ம்பதாம் வருட பொன்விழா எடுப்பதில் மகிழ்வு ாள்கிறோம். எம் பெற்றோரின் அர்ப்பணிப்பாலும், தியாக தையாலும், வழிநடத்தலாலும், கண்டிப்புடன் கூடிய வுரைகளினாலும் நாம் பெற்றுக்கொண்டவை ஏராளம். ழையிலும், வெயிலிலும் தம்மையே கரைத்து ஓடாக்கி ம்மை வாழவைத்த எம் தெய்வங்களுக்கு நாம் லுத்தும் அன்புக் காணிக்கை இது. ஊரார் பிள்ளைகள் டிலும் தம் பிள்ளைகள்போல் அன்பு, பரிவு காட்டி, ிபாடு சிறக்க, ஆலயத்திருப்பணி மேலோங்க மூப்பராக ல்லும், பகலும் உழைத்து அனைவருக்கும் ஒளி ிளக்காகத் திகழ்ந்து மற்றோரின் மகிழ்வில் இன்பம் கண்ட எம் குல தெய்வங்களுக்கு எம் உற்றார் உறவினர், நண்பர்கள், அன்பர்கள், சார்பிலும் வாழ்த்துக்கள் கூறி இறையாசீர் வேண்டி நிற்கிறோம்.

அன்புப் பிள்ளைகள்

---


**உங்கள் திருமண யூபிலி மகிழ்ச்சியை மன்னா வழியாக நினைவு கூர்ந்து கொண்டாடுங்கள்!**

**உங்கள் திருமண யூபிலி உட்பட ஏனைய விளம்பரங்களுக்கான கட்டண விபரம் பின்வருமாறு அமையும்.**

மன்னா பத்திரிகையின்
1 பக்கத்திற்கு ரூபா 6000.00
1/2 பக்கத்திற்கு ரூபா 3000. 00
1/4 பக்கத்திற்கு ரூபா 1500. 00
1/8 பக்கத்திற்கு ரூபா 750. 00
1/16 பக்கத்திற்கு ரூபா 400. 00

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 8ம் பக்கத்தில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## சாதியம் சிந்தனைக் கதை



அந்த வீட்டிலுள்ள சமையலறையில் பாத்திரங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அதிலிருந்து மேலே இன்னொரு பாத்திரமும் கவிழ்க்கப்பட்டிருந்தது. அந்த வீட்டிற்கு நிறையப்பேர் விருந்துண்ண வருவது வழக்கம். அப்போது மேலடுக்கில் உள்ள பாத்திரத்திற்கும் கீழடுக்கில் உள்ள பாத்திரத்திற்கும் சண்டை ஏற்படும். ஒரு நாள் காரசாரமான சண்டையின்பின் மேலடுக்குப் பாத்திரம் கீழடுக்கில் உள்ள பாத்திரத்திடம் "நண்பா நமக்குள் ஏன் வீண் பிரச்சினை? எதற்காக இந்த வீட்டுக்காரர் எங்களை வேறுபடுத்தி வைத்துள்ளார்கள்" என்றது. அதற்குக் கீழடுக்குப் பாத்திரம் "இவர்கள் சாதி சமயம் பார்ப்பவர்கள். ஆதலால்தான் இப்படி நம்மை வேறுபடுத்தி வைத்திருக்கிறார்கள்." என்றது. "என்ன.... சாதியா? அப்படி என்றால் என்ன?" என்று வினவியது மேலடுக்குப் பாத்திரம். "ஆண்டவன் சமத்துவமாகவே நம்மையும் இந்த மனிதர்களையும் ஏன் எல்லா உயிரினங்களையும் படைத்தார். ஆனால் இந்த மனிதன் ஆண்டவனின் படைப்பையே தரம்பிரித்துத் தகுதி பார்க்கிறான். நண்பா, நான் ஏழைகள் உண்பதற்கும் குடிப்பதற்கும் பயன்படுன்றேன். ஆனால் நீ பெரிய அந்தஸ்தில் உள்ளவர்கள் உண்ணவும் குடிக்கவும் பயன்படுகிறாய்" என்றது கீழடுக்குப் பாத்திரம். அதற்கு மேலடுக்குப் பாத்திரம் "நண்பா, உண்மைதான். நானொரு பணக்கார அடிமைதான். உன்னைப் பயன்படுத்துபவர்கள் உன்னைக் கழுவி உரிய இடத்தில் வைக்கின்றனர். ஆனால் என்னை அவர்கள் கழுவுவதுமில்லை மேசைமீதே விட்டுச் செல்கின்றனர்" என்றது சோகமாக. அதற்கு கீழடுக்குப் பாத்திரம் "மனிதர்கள் தமக்குள் எப்பேற்பட்ட சாதிவேறுபாடு காட்டினாலும் நாம் எப்போதும் நாமாகவே இருப்பதற்கு ஏதேனும் வழியுண்டா?" என்று கேட்டது. அதற்கு மேலடுக்குப் பாத்திரம் "எனக்கும் அதுதான் பிரச்சனை. நாம் எந்த முயற்சி எடுத்தாலும் இந்த வெறி பிடித்த மனிதர்கள் ஏற்றத்தாழ்வு பார்க்கும் நிலையை கைவிடப்போவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் நாம் எதைச் சொன்னாலும் செய்தாலும் அவர்கள் ஏற்கமாட்டார்கள்." என்றது. அதன்பின் மேலடுக்குப் பாத்திரம் கீழடுக்குப் பாத்திரத்திடம் "நண்பா மனிதர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும். ஆனால் நமது ஒற்றுமையும் பகிர்வும் நம்முள் நிலைத்திருக்கட்டும்." என்று கூறி இருபாத்திரங்களும் கலகலத்தன!

## பெண் கல்வி

பெண்களது கல்வி ஆர்வம் இக்காலத்தில்கூட தடைப்படுவது விந்தையானது. பெண் படித்து என்ன செய்யப் போகினறாள் ... என்ற மனோபாவம் இன்றும்கூட வளர்ந்து வருகின்றது. கல்விக்கு ஒத்ததாக இப்பூமியில் யாதொன்றுமில்லை. ஒரு மனிதன் அறிவினால் மட்டுமே பூரணத்துவம் அடைகின்றான். இத்தகைய கல்வி பெண்குலத்திற்கு மறுக்கப்படுதல் மனித சமுதாயத்திற்கு நாம் இழைக்கும் அநீதியாகும். மனோதத்துவ அறிவு பகுத்தறிவு வளர்ச்சி பெருகி வரும் விஞ்ஞன அறிவு ஆகிய பல துறைகளை நாம் பெண்களிடமிருந்து விலக்கி அவர்களை கிணற்று தவளைகளாக வைத்திருந்தால் நாம் முன்னேற்றப் பாதையின் பல கட்டங்களை பின்னுக்கு தள்ளுகிறவர்கள் ஆவோம். ஒரு நாட்டின் வளர்ச்சியோ சமூகத்தின் வளர்ச்சியோ ஆணினத்தின் வளர்ச்சியில் மட்டும் கணிக்கப்படுவதில்லை. ஆகவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெண் கல்வியில் ஊக்கம் எடுத்து இருபாலாருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க முன்வர வேண்டும். "பெண்புத்தி பின் புத்தி" என்ற பழமொழியில் ஆதாரபூர்வமான அறிவுக்கொள்கை ஏதுமில்லை. ஆண்புத்தியும் எப்படி வரவேற்கப்படுகின்ற தென்பதிலேயே அதன் முன் நிலைமையும் பின் நிலைமையும் புலப்படுமேயன்றி அது பெண்புத்தியாக இருப்பதால் பின் புத்தியாக இருக்காது. பெண் பின்னுக்கு தள்ளப்பட்ட நிலையில் அவள் புத்தியும் உபயோகிக்கப்படாமல் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. எத்தனையோ குடும்பங்களில் பெண்களே வேலைக்குப்போய் தாய் தகப்பன் தம்பி தங்கையரை காப்பாற்றுகிறார்கள். இங்கே பெண் தனது குடும்பத்தில் ஏனையோருக்கு படியளக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். எவ்வித கட்டாயமுமின்றி தன் சுய விருப்பத்தின்படி தனக்கு பொருத்தமானதும் ஏற்றதானதுமான கல்வி பிரிவையோ தேர்ச்சியையோ ஒரு பெண் தன் சுய அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் பொருட்டே தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அமைக்கப்பட வேண்டும். இந்த முக்கிய காரணத்தை மனதில் கொண்டே நாம் இதில் அக்கறை கொண்டோர் எல்லோரையும் தங்கள் கருத்துக்களை எங்கெங்கு முடியுமோ அங்கங்கே எடுத்துரைக்க வைக்க வேண்டும்.

எஸ். செல்வராணி கூஞ்சு
தரம் - 12 கலைப்பிரிவு, அரிப்புத்துறை

# கவிதைக் களம்

மறைமாவட்ட மட்டத்திலான
விவிலிய கவிதைப் போட்டி - 2001

**ஒவ்வொரு தலைப்பிலும் முதலிடம் பெற்ற கவிதைகள்**

### கிறீஸ்துவின் சாட்சிகள் நாங்கள்

கிறீஸ்துவின் சாட்சிகள் நாங்கள்
அவரது புகழை சாற்றிட வாரீர்
உலகில் உயர்ந்தது அவர் புகழே
கிறீஸ்துவின் மறை சாட்சிகள் நாங்கள்.

இரட்சிப்பின் தேவனின் சாட்சிகளாய்
மாறிட நீவிரும் வந்திடுவீர்
அவரது பெயரை உயர்திட வாரீர்
கிறீஸ்துவின் நினைவில் வாழ்ந்திட வாரீர்.

கிறீஸ்துவின் புகழை உயர்த்திடுவோமே
அவரில் அனைவரும் கலந்திடுவோமே
அவரது சாட்சியாய் மகிழ்ந்திடுவோமே
வாரீர் வாரீர் வாரீர் தோழர்களே

அ. சிறோமி குருஸ், ஆண்டு - 9A

### எம்மைக் கைவிடார் இயேசு

மாய உலகில் மயங்கிய நினைவில்
வழிதப்பி வாழும் வரண்ட மனங்கள்
பாலை நிலத்தில் கானல் நீரை
காலமும் தேடி அலையும் மான்கள்

வாழ்க்கைக் கடலில் கோரப் புயலில்
திசைதெரியாது தவிக்கும் மரங்கள்
முகமறியாத முகவரி தன்னை
தேடி அலையும் முகவுரைகள்.

நீதி அற்ற உலகினிலே
நாதி அற்ற மனித இனம்
ஓதி அவரை தொழுதிட்டால்
சேதி சொல்வார் யேசுபிரான்

J.எயறின், ஆண்டு 7A
மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, மன்னார்.



### கலங்காதே மகனே

பூ மலர்ந்தாடும் நந்தவனப் பூமிதனில்
போர் பிளந்தாடு தென்று
கலங்காதே மகனே கலங்காதே மகளே
நீர் போற்றும் உத்தமனார் இயேசு எம்
பார் எல்லாம் பார்த்திடுவார் என்பதை
மறக்காதே மகனே மறக்காதே மகளே
சமாதானம் மலரும் இப்பூமிதனில் - போர்
தலைவிரித்து தாண்டவம் ஆடுதென்று
கலங்காதே மகனே கலங்காதே மகளே

கார் சூழ்ந்தெம் வாழ்வெல்லாம்
வேரற்றுப் போம் என்று
கலங்காதே மகளே கலங்காதே மகனே
சோர்வுற்று தோள் தள்ளாடும்
போதெல்லாம்
பேர் சொல்லி அழைத்திடுவார் என்பதை
மறக்காதே மகளே மறக்காதே மகனே
பூமுகம் சிரித்தாடும் பூமிதனில் - உன்
பூ முகம் சிரித்திட இடமில்லையே என
கலங்காதே மகளே கலங்காதே மகனே

ம. நிலுாஜினி,
ஆட்காட்டிவெளிப்பங்கு

### நீரே எனது வழி

காலமென்னை கரங்களாலே நசுக்குதையா,
கவலையது வெண்பனிபோல்
உருக்குதையா,
சிறகிழந்த பறவைபோல் கலங்குகின்றேனே,
சீராக்க யாருமில்லை எனக்கிங்கே.

போதைவஸ்து பழக்கமென்னை நெருக்குதையா
போராட்டம் என்னை வந்து சூழுதையா,
பொங்கியெழும் மனிதர் முன்னே,
பொறுத்துப் போக முடியவில்லை.

கர்ச்சிக்கும் சிங்கம்போல் பாய்கிறேனே,
கருத்தினிலே தீமையதை
நினைக்கின்றேனே,
படைத்தவரை வாழ்வினிலே
மறக்கின்றேனே,
மற்றவரை அடிமையாக ஆழ்கின்றேனே.

எனது வழி திசைமாறிப் போய்விடாமல்,
உனது வழி எனது வழி ஆகிடவே,
உள்ளமதை உனக்களித்தேன்
இறையவனே,
என்றென்றும் எனது வழி நீயாவீர்



# வாசகர் எண்ணங்கள்











### என்னை ஏமாற்றி விடாதே

அலைகடல் வற்றினாலும் என் அன்புக் கடல் வற்றாது. பெருங்கடல் வற்றினாலும் என் பேரன்புக் கடல் வற்றாது. றோசாப்பூ மணம் மாறினாலும் என் அன்பு மனம் மாறாது. என் அன்பின் மன்னாவே, வானில் சூரியன் உதிக்க மறந்தாலும் நான் உன்னை மறக்க நினைப்பதில்லை. ஏன் என்றால் உனது அனைத்து ஆக்கங்களும் அருமை. அதைவிட வாசகர் எண்ணங்கள் என்ற பெயரில் அனுப்பும் அனைத்து அம்சங்களும் அருமை. மன்னா நீ என்றும் வாழ்க. வளமுடன் உன் சேவை ஓங்குக. மன்னா உன்னை எதிர்பார்த்திருக்கும் என்னை ஏமாற்றி விடாதே. காலம் தாழ்த்தி வந்தாலும் நிச்சயம் எனது கருத்தை சுமந்து வருவாய் என எதிர்பார்ப்பேன்.
வாழ்க மன்னா வளர்க சேவை,

அ. இருதயநாயகி (சித்திரா)
கல்நாட்டின குளம், வவுனியா.

### கருத்துக்களை மெச்சுகிறேன்

மன்னா கிறிஸ்மஸ் சிறப்பிதழ் வெகு அழகாகக் காட்சியளித்தது. விடயங்களும் நன்றாய் அமைந்துள்ளது. தங்களது ஆக்கங்கள், கருத்துக்களை மெச்சுகிறேன். என்றும் தரம் குன்றாது வளர வாழ்த்துகிறேன். நன்றி. அன்பின் வணக்கம்.
அருட்சகோ. லூயிஸ், தெகிவல கொழும்பு

### குறுகிய காலத்தில் வளர்ச்சி

மன்னா பத்திரிகை சகல விடயங்களையும் உள்ளடக்கி தரமான பத்திரிகையாக குறகிய காலத்தில் வளர்ச்சியடைந்ததை கண்டு மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். மன்னார் திருச்சபையின் அனைத்து செய்திகளையும் அறியக் கூடியதாக உள்ளது. தங்களின் சேவையை இறைவன் என்றும் ஆசிர்வதித்து வழிநடத்துவாராக.
அருட்சகோதரி ஜெயா, திருக்குடும்ப கன்னியர் மடம், கரம்பன், யாழ்ப்பாணம்

### திருப்பலி பாடல்கள் தொடர்பாக

கனம் பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கும், பத்திரிகை குழுவினருக்கும் வணக்கம். தங்களின் கார்த்திகை மன்னா இதழ் கிடைக்கப்பெற்று மிக்க மகிழ்ச்சிடைந்தேன். தேர்தல் பற்றிய நிலை பரங்களையும், அறிவுரைகளையும், தெளிவாக எடுத்துக்காட்டி விளக்கியிருந்தீர்கள். பொதுமக்கள் நல்லவர்களைத் தெரிந்து, ஏமாற்றுக் காரர்களையும் தேவையற்றவர்களையும் நிராகரித்திருந்தார்கள் என்பதை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுத்தது, அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை உலகறியக் காட்டியுள்ளது.
திருப்பலி பாடல்கள் தொடர்பாக, திரு வழிபாட்டு ஆணைக்குழு பற்றிய அறிக்கை வாசித்தேன் இங்கு கையில் இருக்கும் பாடல்களில் சில தங்கள் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தனவா, இல்லையா? என் நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட பல பாடல்கள் இப்பொழுது பாவனையில் இருக்கின்றன. இவைகள், தங்கள் பாடல் ஆணைக்குழு - விற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டனவா? என எண்ணத் தோன்றுகிறது. அந்தளவுக்கு மோசமான கருத்துக்களையும் வசன தொகுப்புக்களையும், எதுகை, மோனை சொற்பதங்கள் என்பவற்றுடன் பாடல் இராகங்கள் கவனிக்கப்படாதவையாக இருப்பதாகவே நான் கருதுகிறேன். (சில சமயம் இவை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பாடலாக இருக்கலாம்.) இது சம்பந்தமான எனது கருத்துக்களையும், பாடல் பிரதிகளையும், கசற் சிடி என்பவற்றை அனுப்பி வைப்பதற்கு உதவியாக தயவு செய்து திருப்பலி பாடல்கள் தொடர்பாக திருவழிபாட்டு ஆணைக்குழுவின் முழு தபால் முகவரி, தொலை நகல் இலக்கம் ஆகிய விபரங்களை தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.
மரியாம்பிள்ளை மரியநாயகம் பிரான்ஸ்.

**பதிப்பாசிரியர் குறிப்பு**

தாங்கள் கேட்டவற்றை உங்கள் முகவரிக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

ஒவ்வொரு மன்னாவிலும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் அறிவு சார்ந்த ஆக்கபூர்வமான பயனுள்ள கேள்வி ஒன்று பாராட்டுக்குரிய கேள்வியாகத் தெரிவுசெய்யப்படும். எங்கே உங்கள் கேள்விக் கணைகளை அனுப்புங்கள்!

(பதிப்பாசிரியர்)

கே. பெரியப்பா, அண்மையில் நீங்கள் ஆச்சரியப்பட்ட சங்கதி ஒன்று சொல்லுங்களேன்?

**சந்தியாப்பிள்ளை, அரிப்புத் துறை**

ப. குறோஸ்மை வெயிலில் உருகும் தார் றோட்டில் நூற்றுக்கணக்கான மைல்களை நடந்து பாதயாத்திரை மேற்கொண்டவர்களின் தியாகத்தை எண்ணியே நான் இன்னும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறேன். இதிலே சிலர் உண்ணா நோன்பிருந்து காலில் செருப்பும் இல்லாமல் பாதங்கள் பொக்கிளித்து நீர் வடிய வடிய பாதயாத்திரையின் இறுதி எல்லையை அடைந்த மனத்தைரியத்தை நினைந்து நினைந்து ஆச்சரியப்படுகிறேன்.

கே. கிறிஸ்தவம் தனிப்பட்ட மனிதனின் பொருளாதார சுதந்திரம் பற்றி எதுவும் கூறுவதில்லையே?

**புதியவன், வவுனியா**

ப. நீங்கள் எந்த உலகத்திலிருக்கிறீர்கள்? கிறிஸ்தவம் தனிமனிதனின் பொருளாதார சுதந்திரத்தை மதிக்கிறது அதற்காகப் பாடுபடுகிறது. அதனாலேயே பொதுவுடைமையின் பேரால் தனி மனிதனின் பொருளாதார சுதந்திரத்தைப் பறிக்கிற கம்யூனிஸம், திருச்சபையின் நிரந்தர எதிரியாயிருக்கிறது.

கே. ஒரு பெண்ணிடமோ ஆணிடமோ அன்பைப் பெற வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்.?

**பிறின்ஸ், கியுடெக், யாழ்ப்பாணம்**

ப. அன்பைக் கொடுக்க வேண்டும்.

கே. ஆசைக்கு அளவு உண்டா?

**த. ஜினேஸ் பெர்னாண்டோ, சின்னக்கடை, மன்னார்.**

ப. ஆசைக்கு அளவே இல்லை. அதனால்தான் "ஆசையே அலை போல நாமெல்லாம் அதன் மேலே" என்று ஒரு கவிஞன் பாடிவைத்தான் போலும்.

கே. கேள்வி கேட்பதா விடை கூறுவதா எது சுலபம்?

**விஜய குமரன், மன்னார்.**

ப. இது போன்ற கேள்விகளுக்கு விடை கூறுவது.

▣ கே. திருமணங்கள் சொர்க்கத்திலா நிச்சயிக்கப்படுகின்றன?

**ஜெயகாந்தன், முருங்கன் பிட்டி, முருங்கன்.**



ப. ஆம் என்றால் விவாகரத்துக்கள் எங்கே நிச்சயிக்கப்படுகின்றன என்று கேட்பீர்கள். எங்கே நிச்சயிக்கப்படுகின்றன என்பது முக்கியமல்ல. திருமணத்திற்கு பின் இல்லறத்தை சொர்க்கமாக வைத்திருக்கிறீகளா? நரகமாக வைத்திருக்கிறீர்களா? என்பதுதான் முக்கியம்.

கே. உலகில் நீங்கள் மிகவும் உயர்வாக நினைப்பது?

**பாக்கியம், முள்ளிக்குளம்.**

ப. எல்லோரையும்போல எவரெஸ்ட் மலைச் சிகரத்தைத்தான்.

கே. செபமாலையின்போது எப்போதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் என்பதை 53 முறை கூற வேண்டுமா?

**தேன்மொழி, மலர்வனம், இசையூர்.**

ப. உங்களை அறியாமலே மரணம் எத்தனை முறை உங்களை நெருங்கி வந்து விலகியிருக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா?

கே. அதிக பிரச்சினைக்கு முகம் கொடுபவர்கள் ஆண்களா, பெண்களா?

**மணிவண்ணன், தமைன்னார்.**

ப. முகத்திற்கு அதிக பிரச்சினை கொடுப்பவர்கள் பெண்கள்தான்.

கே. பெரியப்பா, அண்மையில் நீங்கள் படித்துச் சுவைத்த ஒரு பொன்மொழி?

**அமலநாதன், முதலை குத்தி, உயிலங்குளம்.**

ப. "யார் யார் உயர்ந்த பதவியில் இருக்கிறார்களோ அவர்களுக்கு குறைந்த சுதந்திரம்தான் உண்டு"
- ஜோன் எட்வர்ட்சன்.

கே. அரசியலில் சேர எது தெரிந்திருக்க வேண்டும்?

**சத்தியவதனி, ஆட்காட்டிவெளி.**

ப. எதுவும் தெரிந்திருக்க வேண்டியதில்லை!

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீத்தார் நினைவுகள்

31 நாள் நினைவு



திரு. சல்வதோர் அன்[illegible] சோசை
வங்காலை.

மண்ணில் 18. 02. 1933 விண்ணில் 20. 03. 2002

மண்ணில் மறைந்த
மாணிக்க சுடரே
விண்ணிற்கு விரைந்திட்ட
மர்மமென்ன?
கண்ணின் கருமணியென
ஆறு மக்களை
கண்கலங்க வைத்து
கருணை வள்ளல்
உன்னை அழைத்தானோ?
எண்ணிலடங்கா உன்
நற்செயல்கள் எண்ணி
என்றும் புகழ்வோமையா!
பண்ணிசைத்து பரமனை
நாடினாயோ!
புண்ணியனே
புவி போற்றும் புனிதா
அன்று ஆசிரிய நண்பனே
துயருற்றோம்!
சென்று விட்டாய்
ஈசன் பாதம் வென்று
விட்டாய். விண்ணரசை
மன்றாடி நிற்கின்றோம்
அமைதி இன்பம்
காண்பாயே யேசுவில்.

பிரிவால் துயருறும் அன்பு மனைவி,மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், சகோதரர் அருட்திரு சாமிநாதன் சொய்சா, (அமதி) அருட்சகோதரி அலிஸ் (தி. கு. ச.) உறவினர், நண்பர்கள்.

2ம் ஆண்டு நினைவு



இறம்பைக்குளம்
வவுனியா

மண்ணில் 03. 07. 1983. விண்ணில் 10. 04. 2000

ஆண்டுகள் இரண்டு
சென்றாலென்ன! பாசமுள்ள
உன் முகம் மறக்குமா?
பகலிரவாய் உன் முகம்
தேடுகின்றோம் - நாங்கள்
பாசமுள்ள செல்வமே எங்கு
சென்றாய்?
அன்னையவள் அன்பு
மகளைத் தேடுகின்றார்!
அன்பான சகோதரி ஏங்கித்
தவிக்கின்றாள்!
கண்மூடித் திறப்பதற்குள்
எங்கு சென்றாய்?
கணப்பொழுதில் எமை விட்டு
ஏன் போனாய்?
அம்மா எனும் கொடியில்
இருமலராய் பூத்திருந்தோம்
அதில் ஒன்றைப் பறிப்பதற்கு
ஆண்டவன் ஏன் நினைத்தான்?
எங்கள் எண்ணமெல்லாம்
நிறைந்திருக்கும் உயிர்ச்
செல்வமே எப்பொழுதும் உன்
நினைவில் வாடுகின்றோம்!
என்றும் எங்களுடன்
இணைந்திரு செல்வமே!

என்றும் உன் பிரிவால் வாடும் அன்பு அப்பா, அம்மா, மற்றும் உற்றார் உறவினர்கள்.

தகவல் பி. சர்மிளா டயானி
மே/பா. பத்திநாதர்
கொறப்பத்தான றோட்,
இறம்பைக்குளம், வவுனியா.

## நீத்தார் நினைவுகள் பற்றிய அறிவித்தல்

நீத்தார் நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நி[illegible]னைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு,( அதாவது இறந்தவ[illegible]ன் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாத[illegible] இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவி[illegible]த அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்[illegible]டன் கட்டணமாக ரூபா 500 ஆகியவற்றை அனுப்பி வையுங்கள். தகவல் தருபவரின் பெயர் முக[illegible]வரியையும் முடிந்தால் தொலைபேசி எண்[illegible]ணையும் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலை[illegible]யத்தில் பணி புரியும் அருட்சகோதரி லோறன்சிய[illegible] அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் [illegible]கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரி[illegible]க்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனு[illegible]பி வைப்போம்.
பதிப்பாசிரியர்.


## மன்னா [illegible]தாரர்களே!

உங்கள் சந்தாக் கா[illegible] முடிவடையும் மாதம்
உங்களுக்கு தபால் [illegible]லம் அனுப்பப்படும்
மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே
குறிப்பிடப்பட்டுள்ளது. [illegible]தைப்பார்த்து உங்கள்
சந்தாவை உ[illegible] காலத்தில்
புதிப்பித்துக்கொள்ளுங்கள்.



மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு இலங்கை ரூபா 200
வெளிநாடு இலங்கை ரூபா 750 (10 யூரோ)

# உங்களது மிகச்சிறந்த அன்பளிப்பு மன்னா!

## யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!


**உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!**

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த ஞாபகப்பரிசு

**மன்னா!**

நீங்கள் ஆவலோடு படித்து சுவைக்கும் மன்னாவை தூர இடத்தில் இருக்கும் உங்கள் உறவினர் நண்பர்களும் படித்து சுவைக்கும்படி செய்யலாமே! அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் உறவினர் நண்பரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 750யும் அனுப்பவும். சந்தாப்பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பலாம்.


# நன்றி கூறி பாராட்டுகின்றோம்



கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மடுவில் மன்னா விநியோகத்தில் அயராது தன்னை ஈடுபடுத்தி பெரும் தொகையில் மன்னா பத்திரிகையை விநியோகித்து வந்த பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரர் மாற்கு இக்னேசியஸ்(C. M. S. F) அவர்களுக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றோம். ஆட்காட்டி வெளி, அடம்பன் மற்றும் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் மடுவில் அகதிகளாக இருந்தபோது இம்மக்கள் மத்தியில் இவர் மன்னாவை அறிமுகம் செய்து சிறப்பாக விநியோகித்து வந்தார். தற்போது இந்த மக்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ள நிலையில் அருட்சகோதரரின் அன்பான அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை நன்றியோடு நினைந்து பாராட்டுகின்றோம். (பதிப்பாசிரியர்)


## தொடர்புகளுக்கு

| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
| --- | --- |
| பதிப்பாசிரியர், மன்னா, திருமறைப்பணி நிலையம், செபஸ்ரியார் வீதி மன்னார். | பதிப்பாசிரியர் மன்னா பங்குப்பணிமனை, புனித லோறன்சியார் ஆலயம், தலைமன்னார். |
| OFF. ADDRESS | RES. ADDRESS |
| The Editor, MANNA Pastoral Centre, St. Sebestian's Street Mannar, Sri Lanka. | The Editor MANNA Parish House St. Lawrence Church Talaimannar, Sri Lanka. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

## விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசம் நிதானமானது!

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் 350க்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்களாகப் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சளைக்காமல் நிதானமாக பதிலளித்துள்ளார். விடுதலைப்புலிகளின் தலைவர் இலங்கையின் இரண்டாவது பெரிய சிறுபான்மையினமான முஸ்லிம் தலைவர்களை சந்தித்தது, மலையக மக்கள் தலைவர்களைச் சந்தித்தது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவர்களைச் சந்தித்தது ஆகிய அனைத்தும் புலிகளின் அரசியல் விவேகத்தையும் தூரப்பார்வையையும் காட்டுகின்றன.

விடுதலைப்புலிகள் இதுவரை காலமும் மேற்கொண்ட ஆயுதப் போராட்டமும், அரசியல் போராட்டமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதாக இருந்து வந்துள்ளது. விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத் தென்னிலங்கை அரசியலும், இலங்கையின் அரசாங்கமும் இதுவரை காலமாகப் பிரகடனப்படுத்திப் பெற்றது நிரந்தர தோல்வியே என்பதை நாட்டு மக்கள் மட்டுமல்ல முழு உலகமே இப்பொழுது உணர்ந்துள்ளது.

சொந்த அரசியல் இலாபங்களுக்காகவே தென்னிலங்கை அரசியல் சக்திகள் பயங்கரவாதப் பூச்சாண்டிகளைக் காட்டி வந்தன. விடுதலைப்புலிகளின் போராட்டம் உரிமைப் போராட்டம். நாட்டு மக்களின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடாத்தி வெற்றிகளைப் பெற்ற பின்னர் இப்பொழுது அரசியல் போராட்டத்தில் நிதானமாக இறங்கியுள்ளோம் என்ற பிரபாகரனின் அரசியல் தொனி பத்திரிகையாளர் மகாநாட்டில் எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்வியின் பதிலிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் போராட்டம் முரட்டுத்தனமானதல்ல. தென்னிலங்கை அரசாங்கங்கள் முரட்டுத்தனமாக இராணுவ அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டன. அதற்கெல்லாம் பதிலடி கொடுத்து வந்த விடுதலைப் புலிகள் இப்பொழுது அரசியல் போராட்டத்திலே காலடி பதித்துள்ளனர். இனிமேல் அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடரப்படும் கட்டத்திற்கு முன்னோடியாக விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். இப்பொழுது தாய்லாந்தில் தொடரவிருப்பது இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சாக இருக்கப் போகின்றது.

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம், சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படை நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் தீர்வு முன்வைக்கப்பட்டு அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலைமை உருவாகும் பட்சத்திலேதான் அரசியல் தீர்வின் அடிப்டையில் தெளிவுபட முடியும். இந்த நாட்டின் அரசியல் பாதையைச் சீரழித்தது முதலில் இனவாதம் என்றால் அதன் அடுத்த கட்டமாக வெளிப்பட்டது ஆக்கிரமிப்பும் யுத்தமும். பயங்கரவாதத் தடைச் சட்டமும்தான். இந்தச் சட்டத்தின் பின்னணியில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். இந்தக் கட்டம்தான் ஆயுதப் போராட்டத்தையே வேகமடைய வைத்தது.

இலங்கை அரசாங்கமும், தென்னிலங்கை அரசியலும் புதிய பாதையில் காலடி எடுத்துவைக்க முற்படுவது உண்மையானால் முதலிலே விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தெளிவுபட நீக்கவேண்டும். தமிழ் மக்கள் முன்வைத்த அமைதியான சமாதானக் கோரிக்கைகளை எல்லாம் மறுத்தபடி சர்வாதிகாரப் போக்குகளைத் தொடர்வதற்கு அடியெடுத்துக் கொடுத்தது பயங்கரவாதத் தடைச் சட்டம்தான்.ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க முற்படும் பட்சத்தில் உலக நாடுகள் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க முற்படும் சூழல் உருவாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் கூட அர்த்தமில்லாமல் போய்விடும். நிரந்தரமான நியாயமான அரசியல் தீர்வு ஏற்படும்போது சகலவிதமான அரசியல் வன்செயல்களும் கூட அற்றுப் போய்விடும். சயனைட் வில்லைகளுக்கே இடமில்லாத சூழ்நிலை உருவாகிவிடும். இந்த அரசியல் நகர்வு வெற்றிகரமாக நடந்து முடிந்தால் மட்டுமே சமாதானமும், அமைதியும் நிறைந்த நாடாக இலங்கை விழிப்படைய முடியும். விடுதலைப்புலிகள் போராளிகள் என்ற நிலையில் இருந்து இறங்கிச் சமாதானத்திற்குப் பக்கத்துணையாக மாறுவது உறுதி பெறுகின்றது. விடுதலைப்புலிகளின் அரசியல் பிரவேசம் நிதானமானது. அழுத்தம் திருத்தமானது. தெளிவான நாட்டளாவிய அடிப்படைகளை உள்ளடக்கியது. எந்தவித வஞ்சனைகளோ யுக்திகளோ இல்லாதது என்பதைச் சந்தேகப் பிராணிகளான இனவாதிகள் உணர்வதற்கான ஒரு வாய்ப்பைத்தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரபாகரனின் பத்திரிகையாளர் மகாநாடும் அவர் ஏனைய அரசியற் கட்சித் தலைவர்களைச் சந்தித்து பேசிய நிகழ்வும் வெளிப்படுத்தியுள்ளது.

## தமிழ்க் கைதிகள் விவகாரம்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே விடுதலைப் புலிகள் சுதந்திரமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சூழ்நிலை வட-கிழக்கு பகுதியில் புதிய சமாதான எழுச்சியையும் அரசியல் அலையையும் வீசவைத்துள்ளது. ஆனால் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்டு விசாரணையில்லாமல் சிறையில் வைக்கப்பட்டவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

விசாரணை செய் அல்லது விடுதலை செய என்ற கோரிக்கையும், உண்ணாவிரதப் போராட்டமும் புதியதொன்றல்ல. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களை விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். இந்தப் பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையிலே கைதிகளை விசாரணை செய்வது என்ற கதையளப்புகளை விடுத்து, எந்தவித சாட்சியமும் இல்லாது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இந்த விடயத்தை தனது நேரடியான கவனத்திற்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்க முன்வருவதே நியாயமானது.




சட்டப்படி தடை செய்யப்பட்ட கைதி நிலையில் புலிகளுடனான எந்தப் பேச்சுவார்த்தைக்கும் சட்ட அந்தஸ்து கிடைக்காது – செய்தி விமர்சனம்

## கொடையாகப் பெற்றீர்கள்.......

10ம் பக்கத் தொடர்ச்சி

இத் தவக்காலத்தில் நாம் கொடுக்கக் கூடிய முதலாவது பரிசு எமது புனித வாழ்வாகும். மேலும், எமது மத்தியில் உள்ள நோயாளிகள், கைவிடப்பட்டோர், ஏழைகள், சுரண்டப்பட்டோர் இவர்களின் எதிர்பார்ப்பின் அப்போஸ்தலர்களாக மாறி அன்புக் கலாசாரத்தைக் கட்டி எழுப்புவோம். அப்போஸ்தலர்களும் ஆதிக்கிறிஸ்தவர்களும் இதைத்தான் செய்தார்கள். அப்போஸ்தலர்களையும், ஆதிக்கிறிஸ்தவர்களையும் பார்த்தவர்கள் "இவர்கள் தங்களைவிட உயர்ந்த ஒரு செய்தியினை வைத்திருக்கிறார்கள்" என்று கண்டு கொண்டனர்.

தருமத்தில் ஈடுபடுகின்ற உலகில் உள்ள பொது நிலையினர், துறவிகள், குருக்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இத் தரும வாழ்வு அனைத்து கிறிஸ்தவர்களின் வாழ்வாகட்டும்.

அன்பிற்கும், நம்பிக்கைக்கும், முன்னுதாரணமான அன்னை மரியாள் இத்தவக்காலத்தில் எம் அனைவருக்கும் வழிகாட்டியாகவும், பாலமாகவும் இருப்பாராக. உங்கள் அனைவரையும் என் செபத்தில் நினைவு கூர்வேன் என்று உறுதிகூறுவதோடு, எனது அப்போஸ்தலிக்க ஆசிரையும் உங்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக தருமத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவருக்கும் வழங்குகின்றேன்.

## என் கதை............

5ம் பக்கத் தொடர்ச்சி

இறைவன் இம் மொழிபெயர்க்கும் பணியை ஜேம்ஸ் மன்னரின(1611) இதயத்தில் பதித்தார். அப்போது கிடைத்த அனைத்துக் கையெழுத்துப் பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து மொழி பெயர்க்கும்படி மன்னர் கட்டளையிட்டார். இப் பிரதிகள் அனைத்து ஆலயங்களிலும் படிப்பதற்கும் போதிப்பதற்கும் வைக்கப்பட்டு இன்றும் மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது.

ஆனால் நான் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்கு உள்ளேனா? இல்லை. இன்னும் இல்லை. முதல் நூற்றாண்டிலேயே இயேசுவின் சீடர் தோமா மேற்கத்தைய கரைக்கு வந்திறங்கிய போதும் 1728ல்தான் பார்த்தலோமேயஸ் சீ கன்பால்க (1682 - 1719) என்னை தமிழில் மொழிபெயர்த்தார். நான்தான் முதல் முதலாக இந்தியாவில் அச்சடிக்கப்பட்ட புத்தகமாகும. பிறகு வில்லியம் கேரே (1861-1814) 40 வட இந்திய மொழிகளில் என்னை மொழிபெயர்க்கச் செய்தார். உலகில் 6500க்கும் அதிகமான மொழிகள் உள்ளன. அவற்றில் 1650 மொழிகள் இந்தியாவில் உள்ளன. அவற்றுள் 176 மொழிகளில் மட்டும்தான் நான் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இடம் பெற்றுள்ளேன்.

மேலும் 1995ல் திருவிவிலியம் என்ற பெயரில் நான் வெளியிடப்பட்டேன். 2001ல் சுமார் 6 இலட்சம் பிரதிகள் தமிழ் கூறும் நல்லுலகில் விநியோகமாகி இருக்கின்றன. இருப்பினும் என்னைச் சிலர் குறை கூற வேண்டுமென்றே விளைகின்றனர்.

இன்னும் இலட்சக் கணக்கான மக்களுக்கு என்னைப்பற்றிய ஒரு பகுதிகூடத் தெரியாதபடி 1400க்கும் மேற்பட்ட மொழிகள் இவ்வுலகில் உள்ளன. இயேசுக்கிறிஸ்து வழியாக அன்றி மீட்பு, விடுதலை இல்லை என்று உங்களுக்கு நன்கு தெரியும். நற்செய்தியை அறியாத நிலையில் மக்கள் இயேசுவை அறிந்து கொள்ள முடியாது. விவிலியம் என்னும் நான் எப்படி அவர்களை அடைய முடியும்? நீ விரும்பினால் உன்னால் முடியும்.

### வரலாற்று மேற்கோள்

"வரலாற்றில் வாழ்ந்த இயேசுவிடம் ஆழ்ந்த கொள்கைப்பிடிப்பு இருந்தது. தம்முடைய விழுமிய உறுதிப்பாடுகளுக்காக அவர் துறக்கவும் அவர் துயங்கவில்லை."

இந்திய இறையியலாளர் – பவுல் லியோன்

## சவேரியார் குருத்துவக் கல்லூரி........

10ம் பக்கத் தொடர்ச்சி

1997ல் மடுத்தாயின் திருப்பதியிலிருந்து மீண்டும் தன் சொந்த மண்ணை முத்தம் செய்த குருமடம், மீண்டும் 1999ல் தன் மக்களோடு புலம் பெயர்ந்து பண்டத்தரிப்பில் இருப்புக் கொண்டது. 2002ல் மாசி மாத இறுதியில் மீண்டும் தன்னுடைய சொந்த இடத்தில் மகிழ்ச்சியுடன் தன்னுடைய வாழ்வை தொடங்கியுள்ளது. இக்குருமடம் மீண்டும் தன் சொந்த இடத்தில் இயங்க யாழ் ஆயரும், குருக்களும், சிறப்பாக குருமட அதிபர், மற்றும் வதிவிட உருவாக்குனர்கள் (குருக்கள்) அயராது பாடுபட்டு உழைத்தனர். அவர்களோடு அருட்சகோதரர்களும் இரவும் பகலும் முழு ஆர்வத்தோடு தங்களது பங்களிப்பை அளித்து குருமடம் மீண்டும் புதுப்பொலிவு பெற தொடர்ந்தும் புத்துணர்வுடன் உழைத்து வருகின்றனர்.

2001- 2002ம் கல்வி ஆண்டிற்கான இரண்டாவது காலப்பகுதி 2002. 03. 04 அன்று ஆரம்பமாகியது.

தகவல். சகோ பி. நேரு குரூஸ்

## நம்பிக்கையீனங்கள்...........

1ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த காலங்களிலும் இதுபோன்ற யுத்த நிறுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை தீர்க்கமான, தெளிவான நிலைப்பாடுகளின்றி முறிந்து போனதே வரலாறு. ஆனாலும் இம்முறை துணிச்சலுடனும், திடமான தீர்மானத்துடனும், சரியான அடிப்படைகளுடனும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கடின முயற்சியிலே பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஆர்வத்தோடும் உறுதியோடும் செயற்பட்ட இந்நாட்டுப் பிரதமரையும், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவரையும், அனுசரணையாளராகச் செயற்பட்டு அல்லும் பகலும் பாடுபட்டுழைத்த நோர்வே அரசுப் பிரதிநிதிகளையும், மேலும் ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய கட்சித் தலைவர்களையும் நாம் பாராட்டுவதோடு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

போரின் அவலங்களைச் சுமந்துகொண்டிருந்த நமது மக்களுக்கு உண்மையிலேயே இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு பெரிய கொடை. அதேவேளை இது ஒரு பெரிய சவாலும் கூட. காகிதங்களில் வரைந்து விடுவதனால் மட்டும் காரியம் சித்தியாகி விடுவதில்லை.

அவை பழுதுறாவண்ணம் பொறுப்போடு கடைப்பிடிக்கப்பட வேண்டும். அநாவசியமான அத்துமீறல்களைத் தவிர்த்து யுத்த நிறுத்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும். தோன்றியுள்ள இந்நம்பிக்கைக் கீற்றை நாம் நன்முறையில் பயன்படுத்தி நீடித்த, நிரந்தர சமாதானத் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும். காலத்தைக் கடத்தாது மிக விரைவாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். ஏனெனில் சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் அதைக் குலைப்பதற்கு இடங்கொடாத வகையில் விரைவாக முயற்சிகள் எடுக்கப்படுவது அவசியமாகும்.

இவ்வாறான சமாதானச் சூழல், குறிப்பாக யுத்தத்தின் கெடுபிடிகள் மத்தியில் நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வரும் முஸ்லிம், சிங்கள, தமிழ் மக்களுக்கு அவசியமும் அவசரமுமாகத் தேவைப்படுகிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அதேவேளை, நிரந்தர சமாதானத் தீர்வுக்கான பாதை மிக நீண்டது. கடக்க வேண்டிய தடைகள் ஏராளம் உண்டு. கடந்த கால கசப்பான அனுபவங்கள் அனைவரயுமே பாதித்துள்ளன. அவை அடியோடு மறக்கப்பட வேண்டும். நம்பிக்கையீனங்கள் அகற்றப்பட வேண்டும். பகைமை உணர்வுகள் கழுவப்பட வேண்டும். இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் மன்னித்து, ஒப்புரவாகி, ஒருவரை ஒருவர் புரிந்து, கௌரவப்படுத்துவதன் மூலமே சமாதானப் பாதையில் முன்னேற முடியும்.

இந்நாட்டு மக்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு நீதியான சமாதானத்தைக் கண்டடைய, ஒரு புது யுகம் படைக்க, புதுவாழ்வு மலர திடசங்கற்பம் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். இது அனைவரும் சந்திக்க வேண்டிய ஒரு சவால்.

**அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள் விவிலியக் குறுகெழுத்துப்போட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

# மன்னார் மறைமாவட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்குகள்

மன்னார் மறைமாவட்டத்தின் சமூக பொருளாதார மனித முன்னேற்ற நிறுவனமாகிய வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்குகள் பங்குகள் தோறும் நடைபெற்று வருகின்றன. மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து உரையாடுதல், தகவல்களை எப்படி ஆவணப்படுத்துதல் போன்ற விடயங்களில் இக்கருத்தரங்கின் ஊடாக பொதுநிலையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

## பல்சமயத் தலைவர்கள் எகிப்தில் பேச்சு வார்த்தை

இஸ்ராயேலருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் கிறிஸ்தவ, யூத, இஸ்லாமிய தலைவர்களை உள்ளடக்கிய ஏறக்குறைய பன்னிரெண்டுபேர் கொண்ட ஒரு கூட்டம் எகிப்தின் அலெக்சாந்திரியா என்னும் இடத்தில் இடம்பெற்றது. இக்கூட்டமானது அங்கிலிக்கன் ஆயராகிய வணக்கத்துக்குரிய ஜோர்ஜ் கரே என்பவராலும் எகிப்து அல் அஸ்கார் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு சீக் மொகமட் என்பவராலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் மதக்கோட்பாட்டின்படி இறைவனின் பெயரால் அப்பாவி மக்களை கொலை செய்தல் இறைவனின் தூய பெயருக்கு இழுக்கு என்றும், புனித பூமியில் இடம்பெறும் போர், அனைத்து சமய விசுவாசிகளாலும் எதிர்க்கப்பட வேண்டியதொன்று என்றும், புனித நாட்டின் புனித தன்மையை அனைவரும் பேணவேண்டும் என்றும், அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து நிலையான சமாதானத்தை நிலைநாட்ட இறைவனின் அருளால் செயற்படவேண்டும் என்றும், உடன் ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் இச் சமயத் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# நாட்டில் சமாதானம் ஏற்படக்காரணம் மருதமடு அன்னையின் தென்னிலங்கை பவனியே!

### யாழ். குருமுதல்வர் செல்வா அடிகளார்



கடந்த வருடம் மடுமாதா திருச்சுருபம் தென்பகுதிக்கு யாத்திரையாக எடுத்துச் செல்லப்பட்டது. நாட்டில் சமாதானம் ஏற்படக்காரணம் மருதமடு அன்னையின் இந்தத் தென்னிலங்கைப் பவனியே! என யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் ஜே. பி. ஈ செல்வராஜா அடிகளார் தெரிவித்தார். யாப்பாணத்தில் சமாதானத்திற்கான சர்வமத பாதயாத்திரை சின்னமடுவில் இருந்து தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம் வரை மாசி மாதம் 23, 24ம் திகதிகளில் நடத்தப்பட்டது. மேற்படி நிகழ்வை ஆரம்பித்து வைக்கும்போதே யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் செல்வராஜா அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அடிகளார் மேலும் தெரிவிக்கையில் மாதாவின் திருச்சுருபம் சென்ற இடங்களில் எல்லாம் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பான்மை இன மக்களின் மனங்களிலும் நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்ற ஆர்வத்தை மடுமாதா ஏற்படுத்தியுள்ளார். இதன் விளைவாகவே தென் பகுதியில் சாமாதானத்திற்கான குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இது மடுமாதாவின் அற்புதங்களில் ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# “கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள்”

### திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

நாம் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் உயிர்ப்பினால் மீட்கப்பெற்றோம். இம் மீட்பை நாம் பெறவில்லை. மாறாக இம்மீட்பு இறைவனால் எமக்கு கொடுக்கப்பட்ட ஈடிணையற்ற கொடை. இக்கொடை இறைமகன் இயேசு கிறீஸ்துவிலே எமக்கு சாத்தியமானது. என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன் (யோவான் 10: 18) தவக்காலம் மனமாற்றத்தின் காலம். இத்தவக்காலத்தில் இறைவனின் அன்பைத் தியானித்து, அதை வாழ்ந்து எனது விசுவாசத்தை ஆழப்படுத்த “கொடையாகப் பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள்” என்னும் கருப்பொருளைத் தெரிந்துள்ளேன். எமது வாழ்வு (உயிர்) இறைவனின் கொடை. ஆகவே மனித உயிர் அதி மேலாக மதிக்கப்படவேண்டும். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் கண்டுபிடிக்கப்பட்டவை அனைத்தும் மனித நேசத்தை கட்டி எழுப்புவன அல்ல. எமது வாழ்வை கொடையாகப் பெற்றுக் கொண்டோமாகையால், அதை எமது சகோதர சகோதரிகளுக்காக ஒப்புக் கொடுப்போம்.

தொடர்ச்சி 9ம் பக்கம் ;

# யாழ். சவேரியார் குருத்துவக் கல்லூரி

### மீண்டும் தன் சொந்த இடத்தில்

ஈழத் தமிழ்த் திருச்சபையின் இதயம் என அழைக்கப்படும் யாழ். புனித சவேரியார் குருமடம் மீண்டும் தன்னுடைய சொந்த இடமான கொழும்புத்துறையில் இயங்க ஆரம்பித்துள்ளது. இக்குருமடம் 1995ம் ஆண்டிலிருந்து பற்பல இடங்களுக்கு புலம் பெயர்ந்து இயற்கை இரகசியங்களை இயல்பாக்கி மண்ணோடு கலந்த, எம் மக்களோடு கரைந்த உருவாக்கத்தை அதன் கருவாயிருக்கும் குருமட மாணவர்களுக்கும், அது பிரசவித்துள்ள குருக்களுக்கும் அளித்து வந்தது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# மசூதி கட்டத் தடை

இன்றைய நாசரேத்தின் மங்களவார்த்தை கத்தோலிக்க ஆலயத்தின் முன் இஸ்லாமிய மசூதி ஒன்று கட்டப்படுவதற்கு அரசு வழங்கியுள்ள அனுமதி திரும்பப் பெறப்படவேண்டுமென்று புனித பூமியின் கிறிஸ்தவ தலைவர்கள் இணைந்து விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளனர். இஸ்ரேலிய பிரதமர் அலுவலகத்திலிருந்து செயற்படும் விசாரணை அவையைச் சந்தித்தபோது இவ்விண்ணப்பத்தை கிறிஸ்தவ தலைவர்கள் முன்வைத்தனர். இதை ஏற்றுக்கொண்ட இஸ்ரேலிய அரசு மசூதி கட்டுவதற்கு தடை விதித்துள்ளது. கிறிஸ்தவ குழுவிற்கு இஸ்ரவேலின் திருப்பீடத்தலைவர் தலைமை வகித்தார்.

# உலகக் குடும்ப ஒன்று கூடல் 2003

2003ல் நடைபெறவுள்ள உலகக் குடும்பங்களின் ஒன்று கூடலுக்காகப் பிலிப்பைன்சிய திருமறை தயாராகின்றது. குடும்பங்களின் நான்காவது ஆசிய ஒன்று கூடலுக்கான ஒருவருட ஆயத்தம் ஏற்கனவே பிலிப்பைன்சில் ஆரம்பமாகியுள்ளதுடன், இந்நிகழ்வு முதல் தடவையாக ஆசியாவில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. மனிலா மறைமாவட்ட சமூகத் தொடர்பு இயக்குனர் அருட்பணியாளர் ஜொசலிற்றோ ஜொய்சன் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில் “முழு உலகிலும் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன” என்றார்.

# தமிழரும் சிங்களவரும் இணைந்து

### உரோம் நகரில் ஆயர் மல்கம் றஞ்சித்தை வரவேற்றனர்

திருப்பீட மறைபணியாளர்களின் தலைவராகவும் நற்செய்தி அறிவிப்பு திருப்பேராலயத்தின் இணைப் பொதுச்செயலாளருமாக திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட இலங்கை ஆயர் மல்கம் றஞ்சித்திற்கு 17- 02- 2002 அன்று ஞாயிறு மாலை உரோம் வாழ் இலங்கை தமிழரும் சிங்களவரும் இணைந்து வரவேற்பு அளித்தனர்.

உரோம் நகரின் 12 அப்போஸ்தலிக்க பேராலயத்தில் திருப்பலியுடன் தொடங்கிய இவ்வரவேற்பு விழாவில் மறையுரையாற்றிய ஆயர் மல்கம் றஞ்சித் அவர்கள் இலங்கையின் அமைதி நடவடிக்கைகளுக்கென இலங்கை அரசும் தமிழ் போராளிகளும் தம்மை அர்ப்பணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கை வாழ் சிங்களவரும் தமிழரும் தங்கள் வேறுபாடுகளைக் களைந்து பிரிவு மனப்பான்மைகளைக் கைவிட்டு ஒரே குடும்பமாக வாழ வேண்டுமென்ற அழைப்பும் அவரால் முன்வைக்கப்பட்டது. பல நூற்றுக்கணக்கான சிங்களவரும் தமிழரும் க்லந்து கொண்ட இத்திருப்பலி கண்டி பாரம்பரிய நடனத்துடன் தொடங்கியது.

# அவுஸ்திரேலிய ஆயர் மன்னார் விஜயம்

அவுஸ்ரேலிய நாட்டின் நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவரும், மெல்போன் நகர ஆயருமான பேரருள்திரு டீக்கன் அவர்கள் மாசி மாதம் 11ந் திகதி மடுப்பகுதிக்கு வருகை தந்தார். வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கும், மடுப்பகுதிக்கும் விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் உறவாடி மகிழ்ந்தார். 15ந் திகதி மன்னார் பகுதிக்குள் வருகை தந்து முருங்கன், ஜீவநகர் போன்ற இடங்களுக்கும் மன்னாரில் பேசாலை, தோட்டவெளி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்து அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் உணர்வலைகளை கேட்டறிந்தார். அவர் உரையாற்றுகையில் திருச்சபையின் வழிகாட்டலில் அனைவரும் இணைந்து ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நிரந்தர சமாதானம் எனும் கனவு நனவாகவிருக்கும நாள் அண்மித்து விட்டதைப் பாராட்டுகின்றேன். உலகம் தேடும் சமாதானத்தை யேசு மாத்திரமே கொண்டு வர வல்லவர். நாம் உண்மையான இறைபக்தராக – அடியாராகவிருந்தால் அயலவரில் இறைவனைக்காண வேண்டும். எல்லா மனிதருக்கும் அடிப்படை சமத்துவமே இந்த அடித்தளத்திலிருந்துதான் எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என எடுத்துரைத்தார். ஆயருடன் இலங்கை தேசிய கரிற்றாஸ் செடேக் நிறுவன இயக்குனர் அருட்பணி டேமியன் பெர்னாண்டோ முன்னாள் இயக்குனர் ஜே.பி.தேவராஜா மற்றும் திரு தெய்வேந்திரராஜா திரு. குயின்ரஸ் ஆகியோரும் இவ்விஜயத்தில் கலந்து உரையாற்றிச் சிறப்பித்தார்கள். வாழ்வுதய இயக்குனர் அருட்பணி பி. ஜேசுராஜா அவர்கள் மேற்படி விஜயத்துக்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தார்.








மன்னார் மறைமாவட்டத்தின் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப்பெற்றதும் மடுமாதா குடியிருந்ததுமான மாந்தை மாதா திருவிழா மாசி மாதம் 16ம் திகதி மாந்தையில் இடம்பெற்றது. இத்திருவிழாவுக்கு வருகை தந்திருந்த ஒரு பகுதியினரையும், அருள்பணி. எமில் அடிகளார் மறையுரை ஆற்றுவதையும், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் மாதாவின் திருச்சுருபத்தினால் ஆசீர் வழங்குவதையும் படங்களில் காண்கிறீர்கள்.

இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org